ஓம்

# கொங்கு நாட்டுத் தலங்கள்

## தேவாரத் திருப்பதிகங்களும் தல வரலாறுகளும்

தொகுத்தவர் :

புலவர் - ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

வெளியிடுவோர் :

திரு. R. மாசிலாமணி முதலியார் அவர்கள்
(மேயர் & கம்பெனி உரிமையாளர்)

திரு. K. C. நாகலிங்க முதலியார் அவர்கள்
(K. குப்புசாமி முதலியார் & கம்பெனி உரிமையாளர்)

கிடைக்கும் இடம் :

தருமையாதீன சமயப் பிரசார நிலையம்
41, உஸ்மான் சாலை,
தியாகராயநகர், சென்னை-17.

ஓம்

# கொங்கு நாட்டுத் தலங்கள்

## தேவாரத் திருப்பதிகங்களும்
## தல வரலாறுகளும்


தொகுத்தவர் :

புலவர் - ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.



வெளியிடுவோர் :

திரு. R. மாசிலாமணி முதலியார் அவர்கள்

(மேயர் & கம்பெனி உரிமையாளர்)

திரு. K. C. நாகலிங்க முதலியார் அவர்கள்

(K. குப்புசாமி முதலியார் & கம்பெனி உரிமையாளர்)

கிடைக்கும் இடம் :

தருமையாதீன சமயப் பிரசார நிலையம்

41, உஸ்மான் சாலை,

தியாகராயநகர், சென்னை-17.

சாது அச்சுக்கூடம்,
15, மாதவப்பெருமாள் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.

குருபாதம்

# முகவுரை

" ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே "

—திருஞானசம்பந்தர்

நமது புண்ணிய பூமியாகிய பாதகண்டத்தில் இமய மலை முதல் கன்னியாகுமரி வரையிலும், இலங்கையிலும் எண்ணில்லாத திருக்கோயில்கள் உள்ளன. அவற்றைப் பொதுவாக 1008 சிவாலயங்கள் என்று தொகுத்துக் கூறுவர் ஆன்றோர். அவற்றுள் நமது தெய்வச் சைவ செந்தமிழ்ப் பரமாசாரிய மூர்த்திகளான **நால்வர்** பெரு மக்களால் பாடல் பெற்றவை மிகப் பெரும் சிறப் புடையனவாம். பாடல் பெற்ற சிவத்தலங்கள் மொத்தம் 274 என்பர். அவைகள் சோழ நாட்டில் 190, பாண்டிய நாட்டில் 14, (மலைநாடு) சேர நாட்டில் 1, கொங்கு நாட்டில் 7, நடு நாட்டில் 22, தொண்டை நாட்டில் 32, துளுவ நாட்டில் 1, ஈழ நாட்டில் 2, வட நாட்டில் 5 ஆக விளங்கு கின்றன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் திருவுளப் பாங்கின் வண்ணம் நமது சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் சென்னையிலும், சென்னைக்கு அண்மையிலும் உள்ள சிவநேசச் செல்வர்கள் பலரும், மூன்றாண்டுகளாக மாதந்தோறும் முதல் அல்லது இரண்டாவது ஞாயிற்றுக் கிழமைகளில் தொண்டை நாட்டுத் தலங்கள் 32க்கும் நடு நாட்டுத் தலங்கள் 22க்கும் சென்று, வழிபாடும் சமயப் பிரசாரமும் நிகழ்த்தி நிறைவு செய்து மகிழ்ச்சியுற்றனர்.

இப்பொழுது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத் தின் திருவுளக் கருத்தின்படி அன்பர்கள் பலரும் கொங்கு நாட்டுத் தலங்கள் ஏழினையும், சேர நாட்டுத் தலமாகிய திருவஞ்சைக் களத்தினையும், இவற்றைச் சூழ்ந்துள்ள மற்றும் சில திருக்கோயில்களையும், சென்று தரிசித்து வர நமது பிரசார நிலையத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இரண்டு பேருந்தூர்திகளில் 75 அன்பர்கள் இவ் வழிபாட்டு யாத்திரையில் கலந்து கொண்டு மகிழ் கின்றனர். **25-12-61** திங்கள் முதல் **30-12-61** சனிக்

கிழமை முடிய, இக் கொங்கு நாட்டு யாத்திரை நிகழ்கின்றது. இந்த யாத்திரையில் ஆங்காங்கும் தருமை யாதீனப் புலவர் - திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.எ., எல்.டி., திரு. சி. என். சிங்காரவேல் முதலியார், எம்.எ., திரு. கே. கமலக்கண்ணன், எம்.எல்.சி., திரு. புலவர் ந. ரா. முருகவேள், எம்.எ., எம்.ஓ.எல்., திரு. என். டி. கிருஷ்ண சாமி, எம்.எ., பி.டி., திரு. க. சம்பந்த முதலியார், திரு. ந. ரா. ஆடலரசு, திருமதி. க. இராஜரத்தினம் அம்மையார், எம்.எ., எல்.டி., திருமதி. பாப்பாத்தி அம்மையார் முதலியோர் சமய விரிவுரை நிகழ்த்துவர்.

இவ் வழிபாட்டு யாத்திரையில் கலந்து கொள்ளும் அன்பர்களுக்கும் ஏனையோருக்கும் பயன்படும்படி, நமது நிலையத்தின்பால் பேரன்பும் பெரிதும் ஈடுபாடும் உடைய பெருமக்களான சைவத் திருவாளர்கள், மேயர் கம்பெனி-**திரு. ஆர். மாசிலாமணி முதலியார்**, குப்புசாமி அண்டு கம்பெனி-**திரு. கே. சி. நாகலிங்க முதலியார்** ஆகிய இருவரும் "**கொங்குநாட்டுத் தலங்கள்**" என்னும் இந் நூலைத் தமது செலவில் அச்சிட்டு, அன்பர்களுக்கு மனமுவந்து இலவசமாக வழங்குகின்றார்கள். இதன் பொருட்டு நமது சமயப் பிரசார நிலையப் புலவர் - **திரு. ந. ரா. முருகவேள்**, எம்.எ., எம்.ஓ.எல்., அவர்கள், இதனை மிகக் குறுகிய காலத்தில் பெரிதும் முயன்று தொகுத்தும், தல வரலாறுகளை எழுதியும் உதவினார்கள். சாது அச்சுக்கூட மேலாளர் **திரு. மு. நாராயணசாமி முதலியார்** அவர்கள், இதனை மிக விரைந்து நன்கினிது அச்சிட்டுக் கொடுத்தார்கள்.

மேற்குறித்த அன்பர்கட்கும், யாத்திரையில் கலந்து சிவபுண்ணியத்திற்குப் பாத்திரமாகியுள்ள அன்பர்கட்கும், எல்லா நலங்களும் நிறைந்து இனிது பெருகுதல் வேண்டும் என ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளையும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் திருவருளையும் மனமொழி மெய்களால் வழுத்தி வணங்குகின்றேன்.

வாழ்க வையகம்! வளர்க சிவநெறி!

தருமபுர ஆதீன
சமயப் பிரசார நிலையம்,
**41**, உஸ்மான் சாலை, சென்னை-17

இங்ஙனம்:
**சோமசுந்தரத் தம்பிரான்**

# கொங்கு நாட்டுத் தலங்கள்

## 1. திருப்புக்கொளியூர் அவிநாசி

### சுந்தரர்

பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து [உள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே. க

வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாமணிநீ
ஒழிவ தழகோ சொல்லாய் அருள்ஓங்கு சடையானே
பொழிலாரும் சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
இழியாக் குளித்த மாணி எனைக்கிறி செய்ததே. உ

எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறைகொண்டு ஆறலைப் பார்இலை
பொங்கா டரவா புக்கொளியூர் அவிநாசியே
எங்கோ னேயுனை வேண்டிக் கொள்வேன் பிறவாமையே.

உரைப்பார் உரையுகந் துள்கவல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே.

அரங்காவ தெல்லாம் ஆயிடு காடது அன்றியும்
சரங்கோலை வாங்கி வரிசிலை நாணியிற் சந்தித்துப்
புரங்கெட எய்தாய் புக்கொளியூர் அவிநாசியே
குரங்காடு சோலைக் கோயில் கொண்ட குழைக்காதனே. ௫

நாத்தானும் உனைப் பாடல் அன்றி நவிலாதெனாச்
சோத்தென்று தேவர் தொழநின்ற சுந்தரச் சோதியாய்

பூத்தாழ் சடையாய் புக்கொளியூர் அவிநாசியே
கூத்தா உனக்கு நான் ஆட்பட்ட குற்றமும் குற்றமே. ௬

மந்தி கடுவனுக்கு உண்பழம் நாடி மலைப்புறம்
சந்திகள் தோறும் சலபுட்பம் இட்டு வழிபடப்
புந்தி யுறைவாய் புக்கொளியூர் அவிநாசியே
நந்தி யுனைவேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே. ௭

பேணு தொழிந்தேன் உன்னை யல்லாற் பிற தேவரைக்
காணு தொழிந்தேன் காட்டுதியேல் இன்னம் காண்பன்நான்
பூணுண் அரவா புக்கொளியூர் அவிநாசியே
காணுத கண்கள் காட்ட வல்ல கறைக்கண்டனே. ௮

நள்ளாறு தெள்ளாறு அரத் துறைவாய் எங்கள் நம்பனே
வெள்ளாடை வேண்டாய் வேங்கையின் தோலை விரும்பினுய்
புள்ளேறு சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
உள்ளாடப் புக்க மாணி எனைக் கிறி செய்ததே. ௯

நீரேற ஏறும் நிமிர்புன் சடை நின்மல மூர்த்தியைப்
போர்ஏறது ஏறியைப் புக்கொளியூர் அவிநாசியைக்
காரேறு கண்டனைத் தொண்டன் ஆரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்ப வல்லார்க்கு இல்லை துன்பமே. ௧0

திருச்சிற்றம்பலம்

**இருப்பிடம் :** இது கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசி வட்டத்தின் தலைமையிடம். திருப்பூர் இருப்புப் பாதை நிலையத்தில் இருந்து 8 கல் தொலைவில் இருக்கிறது. கோயம்புத்தூரில் இருந்து பஸ் ஏறி 23 கல் சென்றால் இவ்விடத்தை அடையலாம்.

**தலவரலாறு :** சுந்தரர் தேவாரத்தில் " புக்கொளியூர் அவிநாசியே " என்னும் தொடர் வருவதால், இது திருப்புக் கொளியூர் அவிநாசி என வழங்கப்படுகின்றது. விநாசம் (அழிவு) இல்லாதவன் என்னும் பொருளுடைய 'அவிநாசி' என்னும் இறைவனின் பெயரே, இத்தலத்திற்கும் வழங்கப் படுவதாயிற்று. " அரிய பொருளே அவிநாசியப்பா " என்பது திருவாசகம். ஊழிக்காலத்தில் சிவபிரான் அக்கினித் தாண்டவம் செய்தபோது, தேவர்கள் அஞ்சி நடுங்கி, இங்கு

வந்து புக்கு ஒளித்த காரணத்தால் புக்கொளியூர் எனப் பெயர் பெற்றது என்று தலபுராணம் கூறும். இதற்குத் தட்சிணகாசி, தட்சிணவாரணாசி என்ற பெயர்களும் உண்டு. இங்கு தான் சுந்தரர் முதலையுண்ட மதலையை மீண்டும் உயிர் பெற்று வரச்செய்தார். "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே" என்பது சுந்தரர் தேவாரம். "குளத்திடை இழியாக் குளித்த மாணி எனைக் கிறி செய்ததே", "குளத்திடை உள்ளாடப்புக்க மாணி எனைக்கிறி செய்ததே" என்றும் சுந்தரர் தமது பாடலில், முதலை யுண்ட பாலனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இங்குப் பிரமதேவர், ஐராவதம், தாடகை, நாக கன்னிகை, தெய்வரம்பை முதலியோர் பூசித்துப் பேறு பெற்றனர். வியாதன் என்ற வேட்டுவ அரசன் வழிபட்டுப் புத்திரப் பேறு பெற்றான்.

**கோயில் அமைப்பு :** கோயில் கிழக்கு நோக்கி யிருக்கின்றது. கோபுரம் அடித்தளத்துடன் மட்டும் இருக்கிறது. கோயிலுக்குள் இரண்டு பிராகாரங்கள் உள்ளன. கோபுரத்தின் முன்புறம் இரண்டு கூத்தாடும் பிள்ளையார் திருவுருவங்கள் உள்ளன. உள் வாயிற்படிகளில் துவாரபாலகர்கள் காட்சியளிக்கின்றனர். கோபுரத்தின் கீழ் உள்ள மற்றொரு படிக்கட்டில் மாணிக்கவாசகரும் சுந்தரரும் மேற்கு நோக்கி இறைவனை வணங்கும் நிலையில் எழுந்தருளி இருக்கின்றனர். உள்ளே நுழைந்ததும் சந்நிதிக்கு எதிரில் பெரிய நந்தி யுள்ளது. அம்பிகையின் கோயில், இங்கு வலப்புறமாக அமைந்துள்ளது. அம்பிகை கோயிலின் கருவறையின் மேற்புறச் சுவரில் ஒரு பெரிய தேள் உருவம் செதுக்கப்பட்டிருக்கின்றது. அதனையும் மக்கள் வழிபடுகின்றனர். அவிநாசியப்பர் கோயிலுக்கு வெளியில் திருக்குளத்துக்கு எதிரில் அம்பிகையின் தனிக் கோயில் இருக்கின்றது. அம்மை தவக்கோலத்தில் காட்சி யளிக்கின்றாள்.

**சிற்பங்கள் :** கோயிலின் மண்டபத் தூண்களிலும் கருவறைச் சுவர்களிலும் அழகிய சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஊர்த்துவதாண்டவமூர்த்தி, காளி, வீரபத்

திரர், குறவன் குறத்தி, வேடனாக வந்த முருகன், மண்டபங் கட்டிய காளியப்பகவுண்டர், அவர்தம் மனைவி மகன் முதலிய சிற்பங்கள் கண்டு மகிழத்தக்கவை. முதலையிருந்த மடு இப்போது தாமரைக்குளம் என அழைக்கப்படுகின்றது. கோயிலுக்குத் தெற்கே சிறிது தொலைவில் ஏரியாக உள்ள அதன் கரையில், சுந்தரர் கோயிலும், அவர் திருமுன் முதலை வாயினின்று பிள்ளை வருவதுபோன்ற சிலையுருவமும் உள்ளன. கோயிலுக்கு வெளியே சந்நிதிக்கு எதிரிலுள்ள விளக்குத்தூண் மண்டபத்திலும் சுந்தரர், முதலைவாய்ப் பிள்ளை, மீன்வாயில் இலிங்கம் ஆகிய சிற்பங்களைக் காணலாம்.

**தீர்த்தங்கள் :** காசிக் கங்கை என்ற கிணறு கோயிலுக்குள் இருக்கின்றது. கோயிலுக்கு வடபுறம் வெளியில் நாககன்னிகைத் தீர்த்தமும் (கிணறு), கோயிலுக்கு எதிரில் நீராழி மண்டபத்துடன் திருக்குளமும் இருக்கின்றன. நள்ளாறு என்ற தீர்த்தம் கோயிலுக்கு வடபுறம் ஓடுகின்றது. கோயிலுக்கு எதிரில் வரும் இதன் துறையினை ஐராவத தீர்த்தம் என வழங்குகின்றனர். தலவிருட்சம் மாமரம். இதன் அடியில் தவஞ்செய்து அம்பிகை இறைவனின் வலப் பாகம் பெற்றனள். மாமரம் இருந்த இடத்தில் இப்போது பாதிரிமரம் உள்ளது. அங்கு அம்பிகையின் தவக்கோலம் காணலாம். இத்தலத்து இறைவன் திருப்பெயர் அவிநாசி யப்பர், அவிநாசிநாதர் என்பன. தேவியின் பெயர் பெருங் கருணையம்பிகை, கருணாலயச் செல்வி என்பவை.

**கல்வெட்டுக்கள் :** இக்கோயிலிற் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. வீரராசேந்திர சோழன், குலோத்துங்க சோழன், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன். கோனேரின்மைகொண்டான், வீர நஞ்சராய உடையார், வீரசிக்கராய உடையார், விஜயநகர அச்சுததேவ மகாராயர் முதலிய பலர், நித்திய பூசை விழா திருவிளக்கேற்றல் அன்னம் பாலித்தல் முதலிய அறச்செயல்கள் நிகழத் தானங்கள் அளித்தமையினை இக்கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. குளக்கரையில் உள்ள சுந்தரர் கோயிலைக் கட்டியவன் சுந்தரபாண்டியன் என்பது ஒரு கல்வெட்டாற் புலனாகின்றது.

# 2. திருமுருகன் பூண்டி

## சுந்தரர்

### பண் - பழம் பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்டு ஆறலைக்கும்இடம்
முடுகு நாறிய வடுகர்வாழ் முருகன் பூண்டிமா நகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கிங்
கிருந்தீர் எம்பிரானிரே. க

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல்லிக்
கல்லினால் எறிந்திட்டும் மோதியும் கூறைகொள்ளும் இடம்
முல்லைத் தாது மணங்கமழ் முருகன் பூண்டிமா நகர்வாய்
எல்லைக் காப்பதொன் றில்லை யாகில்நீர் எத்துக்கிங் கிருந்தீர்
எம்பிரானிரே. உ

பசுக்களே கொன்று தின்றுபாவிகள் பாவமொன் றறியார்
உசிர்க்கொலை பலநேர்ந்து நாள்தொறும் கூறைகொள்ளும் இடம்
முசுக்கள் போற்பல வேடர்வாழ் முருகன்பூண்டிமா நகர்வாய்
இசுக்கழியப் பயிக்கம் கொண்டுநீர் எத்துக்கிங் கிருந்தீர்
எம்பிரானிரே. ங

பீறற் கூறை யுடுத்தோர் பத்திரங் கட்டி வெட்டனராய்ச்
சூறைப் பங்கியர் ஆகி நாடொறும் கூறைகொள்ளும்இடம்
மோறை வேடுவர் கூடிவாழ் முருகன் பூண்டிமா நகர்வாய்
ஏறுகால் இற்றது இல்லையாய்விடில் எத்துக்கிங் கிருந்தீர்
எம்பிரானிரே. ச

தயங்கு தோலையுடுத்த சங்கர சாமவேதம் ஓதி
மயங்கி யூரிடு பிச்சை கொண்டுணும் மார்க்கம்ஒன் றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடும் முருகன் பூண்டிமா நகர்வாய்
இயங்கவும் மிடுக்கு உடைய ராய்விடில் எத்துக்கிங் கிருந்
தீர் எம்பிரானிரே. ரு

*

விட்டிசைப்பன கொக்கரை கொடுகொட்டி தத்தளகம்
கொட்டிப் பாடும்இத் துந்துமியொடு குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங்கமழ் முருகன் பூண்டிமா நகர்வாய்
இட்ட பிச்சைகொண் டுண்ப தாகில்நீர் எத்துக்கிங்
கிருந்தீர் எம்பிரானிரே. ௬

வேதம் ஓதி வெண்ணீறு பூசி வெண் கோவணந்தற் றயலே
ஓதம் மேவிய ஒற்றி யூரையும் உத்திநீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளும் முருகன் பூண்டிமா நகர்வாய்
ஏது காரணம் ஏது காவல்கொண்டு எத்துக்கிங் கிருந்தீர்
எம்பிரானிரே. ௭

படஅரவு நுண்ஏர்இடைப் பணைத்தோள் வரிநெடுங்கண்
மடவரல் உமைநங்கை தன்னையோர் பாகம்வைத் துகந்தீர்
முடவர் அல்லீர் இடர்இலீர் முருகன் பூண்டிமா நகர்வாய்
இடவம் ஏறியும் போவ தாகில்நீர் எத்துக்கிங் கிருந்தீர்
எம்பிரானிரே. ௮

சாந்த மாக வெண்ணீறு பூசி வெண்பல் தலை கலனா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணி தன்னைஓர் பாகம்வைத் துகந்தீர்
மோந்தை யோடு முழக்கறா முருகன் பூண்டிமா நகர்வாய்
ஏந்து பூண்முலை மங்கை தன்னொடும் எத்துக்கிங் கிருந்தீர்
எம்பிரானிரே. ௯

முந்தி வானவர் தாந்தொழும் முருகன் பூண்டிமா நகர்வாய்ப்
பந்தணை விரற் பாவை தன்னைஓர் பாகம் வைத்தவனைச்
சிந்தை யிற்சிவ தொண்டன் ஊரன் உரைத்தன பத்துங் கொண்டு
எந்தம் அடிகளை ஏத்துவார்இடர் ஒன்றும்தாம் இலரே. ௧0

திருச்சிற்றம்பலம்.

**இருப்பிடம் :** இத்தலம் திருப்பூர் இருப்புப்பாதை நிலயத்தில் இருந்து 5 நாழிகை தொலைவில் இருக்கிறது.

**தலவரலாறு :** சூர சங்காரத்தின் பின்னர் முருகக் கடவுள் வந்து பூசித்த தலமாதலின், இப்பெயர் பெற்றது. பூண்டி என்பது, பதி பாடி பட்டி என்பன போல ஊர் என்ற பொருளிற் கொங்கு நாட்டில் வழங்கும் பெயர். இதற்கு முல்லைவனம் எனவும் பெயர் உண்டு. "முல்லைத்தாது மணங்கமழ் முருகன் பூண்டி" என்பது சுந்தரர் தேவாரம்.

மாதவி வனத்தில் சுயம்புவாய் முளைத்தெழுந்த இறைவனை முருகப்பெருமான் வழிபட்டார். அம்மூர்த்தி இப்போது மாதேசுவரர் என வழங்கப் பெறுவர். அதன் பின் முருகப் பெருமான் தாமே ஒரு சிவலிங்கம் தாபித்துப் பூசித்தனர். அப்பெருமான் முருகநாதர் எனப்படுவர். சூராதியர்களை வதைத்ததனால் வந்த பிரமசாயை இத்தலத்தில் ஒரு பெரு வேப்பமரத்தின் நிழலில் ஒதுங்கித் தங்கியது என்று தலபுராணங்கூறும். இத்தலத்தையடைந்து வழிபடப் பெறுவோர் பிரமகத்தி, பைத்தியம் முதலிய நோய், பழி முதலிய வற்றினின்றும் நீங்குவர் என்பது, வெளிப்படையாக இன்றைக்கும் காணும் காட்சியாகும்.

சுந்தர மூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் கொடுத்த அளவிறந்த செல்வங்களை எடுத்துக் கொண்டு, இத்தலத்தின் வழியே வரும்போது, இறைவன் திருவிளையாட்டாலே சிவகணங்கள் வேடர்களாகச் சென்று பரிசனங்களை அலைத்து, அப்பொருள்களையெல்லாம் பறித்தனர். சுந்தரர் இங்குள்ள பெருமானை வணங்கிக் " கோடுகு வெஞ்சிலை " என்ற திருப் பதிகம் பாடி, இறைவனால் அப்பொருள்களை மீண்டும் பெற்றனர். சுந்தரர் தோழமை முறையால் இறைவனை நோக்கி 'வடுகவேடுவர் ஆறலைத்துக் கூறைகொண்டு வாழும் இவ்விடத்தில், எல்லைகாப்பதொன் றில்லையாகி, நீர் எத்துக்கு இங்கு இருந்தீர்?' என உரிமையோடு வினவி இகழும் முறையில், இத்தலத்துத் தேவாரப் பதிகம் சுவைபட அமைந்திருப்பது காணலாம்.

**தீர்த்தங்கள் :** பிரமகத்தி பைத்தியம் முதலியனவற்றால் துன்புறுவோர் நீராடி நலம் பெறுவது பிரமதீர்த்தம். இது கோயிலுக்கு வெளியில் வடமேற்றிசையில் உள்ளது. பூசனையின் பொருட்டு முருகப் பெருமான் வேலாயுதத்தை ஊன்றி யுண்டாக்கிய சண்முகதீர்த்தம் திருக்கோயிலுக்கு உள்ளே இருக்கின்றது. திருக்கோயிலுக்கு முன்னே தாமரைக்குளம் என்றும், உருத்திரதீர்த்தம் என்றும், மகாமகதீர்த்தம் என்றும் வழங்கப்பெறும் சிறந்த தீர்த்தம் ஒன்றுண்டு. சிங்காசியில் வியாழன் கூடும் காலத்திலும்,

கும்பராசியில் சூரியன் கூடும் காலத்திலும், மகநட்சத்திரத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கங்கை இங்கண் வந்து கலந்து முழுகிச் செல்கின்றாள் என்று தலபுராணம் கூறுகின்றது. இங்கு இறைவனது இடப்புறத்தில் ஞான தீர்த்தமும், நிருதி திசையில் துருவாச தீர்த்தமும், தென் கிழ்த்திசையில் அக்கினி தீர்த்தமும், மகாமக தீர்த்தத்துக்குப் பக்கத்தில் இந்திர தீர்த்தமும் உள்ளன.

**சிற்பங்கள் :** கள்வனை வேடுபறி வேடர் திருவுருவமும், அதனை யடுத்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொருள் பறியுண்டதும், பறியுண்ட பொருள்கள் மீளப் பெற்றதும் ஆகிய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் திருவுருவங்களும், முருகநாத சுவாமி கோயில் வாயிலில் காணப்படுகின்றன. இறைவனின் கம்பீரமான வேடுவத் திருக்கோலமும், பொருளிழந்த சுந்தரரின் முகவாட்டமும், பொருள் மீண்டும் கிடைக்கப் பெற்றபோது அவர் அடைந்த மகிழ்ச்சியும், சிற்பத்தில் சிறப்புற வடிக்கப்பட்டுள்ளன.

**சுவாமி பெயர் :** மாதவி வனேசர், முருகநாதர். அம்பிகையின் பெயர் : ஆவுடை நாயகி, முயங்கு பூண்முலையம்மை. "முயங்கு பூண்முலை தன்னொடும்" என்று தேவாரம் குறிப்பிடுகின்றது. திருமுருகன் பூண்டி என்ற தலத்தின் பெயருக்கு ஏற்ப, ஆறுமுகக் கடவுள் இங்கு நித்திய வரப்பிரசாதியாய் மிக்க சிறப்புடன் விளங்கி வருகின்றார். தேவியின் திருநாமம் மங்களாம்பிகை. இக்கோயிலின் முன்வாயில் மண்டபத்தின் மேல் கோபுரத்திற்குப் பதிலாகப் பிரமாண்டமான சுதை வேலையாற் செய்யப்பட்ட பெரிய நந்தி இருக்கின்றது. அது மிக நெடுந்தூரம்வரை காட்சி தருகின்றது. திருமுருகன் பூண்டியில் இருந்து அவிநாசிக்குச் செல்லும் சாலையில், அரைகல் தொலைவில் ஒரு பாறையின் மேல் விநாயகர் கோயில் இருக்கின்றது. சுந்தரரை வழிமறித்து நிதிபறித்த இறைவன் இருக்கும் இடத்தைச் சுந்தரர்க்குக் காட்டியருளிய கணபதி இங்கு எழுந்தருளி விளங்குகின்றார். கூப்பிடுபிள்ளையார் என்ற பெயரால் மக்கள் இவரை வழங்குகின்றனர்.

**கல்வெட்டுக்கள் :** இக்கோயிலில் கோனேரின்மை கொண்டான், சுந்தர பாண்டிய தேவன், கொங்கு மன்னனை இராஜாதிராஜ உத்தமசோழன், வீர ராஜேந்திர தேவன், குலோத்துங்க சோழதேவன், விக்கிரம சோழதேவன், வீர நஞ்சைராய உடையார் ஆகியவர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. இந்தக் கோயில் இந்திய அரசாங்கத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரின் பாதுகாப்பில் இருக்கின்றது. அழகிய உருவ வேலைகள் செய்யும் கற்சிற்பிகள் இந்த ஊரில் இருந்து வருகின்றனர்.

சுந்தரரின் திருப்பதிகம் ஒன்றும், அருணகிரி நாதர் திருப்புகழ் ஒன்றும் இத்தலத்திற்கு உள்ளது. மகாவித்து வான் வாசுதேவ முதலியார் என்பவர் இதற்குத் தலபுராணம் பாடியுள்ளார்.

உ

# 3. திருநணா (பவாநி)

### சம்பந்தர்

### பண் – காந்தாரம் – இரண்டாந்திருமுறை

திருச்சிற்றம்பலம்

பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
அந்தார் அரவணிந்த அம்மா னிடம்போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக் கனியுதிர்க்கும் திருநணாவே. க

நாட்டம் பொலிந்திலங்கு நெற்றியினன் மற்றொருகை வீணையேந்தி, ஈட்டுந் துயரறுக்கும் எம்மான் இடம் போலும் இலைசூழ்கானில், ஓட்டந் தரும்அருவி வீழும் விசைகாட்ட முந்தூழோசைச், சேட்டார் மணிகள் அணி யுந் திரைசேர்க்குந் திருநணாவே உ

நன்றாங் கிசைமொழிந்து நன்னுதலாள் பாகமாய் ஞாலமேத்த, மின்றாங்கு செஞ்சடையெம் விகிர்தர்க் கிடம் போலும் விரைசூழ்வெற்பில், குன்றேங்கி வன்றிரைகள் மோத மயிலாலும் சாரற்செவ்வி, சென்றேங்கி வானவர்க ளேத்தி யடிபணியுந் திருநணாவே ௩

கையில் மழுவேந்திக் காலிற் சிலம்பணிந்து கரித்தோல் கொண்டு, மெய்யில் முழுதணிந்த விகிர்தர்க் கிடம்போலும் மிடைந்துவானோர், ஐய அரனே பெருமான்அருளென் றென் றாதரிக்கச், செய்ய கமலம் பொழிற்றேன் அளித்தி யலுந் திருநணாவே. ௪

முத்தேர் நகையாள் இடமாகத் தம்மார்பில் வெண்ணூல் பூண்டு, தொத்தேர் மலர்சடையில் வைத்தார் இடம் போலும் சோலைசூழ்ந்த, அத்தேன் அளியுண் களியா லிசைமுரல ஆலத்தும்பி, தெத்தே யெனமுரலக் கேட்டார் வினைகெடுக்குந் திருநணாவே. ௫

வில்லார் வரையாக மாநாகம் நாணாக வேடங்கொண்டு, புல்லார் புரமூன் றெரித்தார்க் கிடம்போலும் புலியுமானும், அல்லாத சாதிகளும் அங்கழல்மேற் கைகூப்ப அடியார் கூடிச், செல்லா அருநெறிக்கே செல்ல அருள்புரியுந் திருநணாவே. ௬

கானார் களிற்றுரிவை மேல்மூடி யாடரவொன் றரைமேற்சாத்தி, ஊனார் தலையோட்டில் ஊணுகந்தான் தானுகந்த கோயிலெங்கும், நானா விதத்தால் விரதிகள் நல் நாமமே யேத்திவாழ்த்தத், தேனார் மலர்கொண் டடியார் அடிவணங்குந் திருநணாவே, ௭

மன்னீர் இலங்கையர்தம் கோமான் வலிதொலைய விரலாலூன்றி, முந்நீர்க் கடல்நஞ்சை யுண்டார்க் கிடம்போலும் முனைசேர்சீயம், அன்னீர்மை குன்றி யழலால் விழி குறைய அழியு முன்றிற், செந்நீர் பரப்பச் சிறந்து கரியொளிக்கும் திருநணாவே. ௮

மையார் மணிமிடறன் மங்கையோர் பங்குடையான் மனைகள்தோறும், கையார் பலியேற்ற கள்வன் இடம் போலும் கழல்கள்தேடிப், பொய்யா மறையானும் பூமி

யளந்தானும் போற்ற மன்னிச், செய்யார் எரியாம் உருவ
முறவணங்குந் திருநணுவே. க

ஆடை யொழித்தங் கமணே திரிந்துண்பார் அல்லல்பேசி
மூடுருவம் உகந்தார் உரையகற்றும் மூர்த்தி கோயில்
ஓடுநதி சேரும் நித்திலமும் மொய்த்தகிலும் கரையிற்சாரச்
சேடர் சிறந்தேத்தத் தோன்றியொளிபெருகுந் திருநணுவே.

கல்வித் தகத்தால் திரைசூழ் கடற்காழிக் கவுணிசீரார்
நல்வித் தகத்தால் இனிதுணரும் ஞானசம் பந்தன் எண்ணும்
சொல்வித் தகத்தால் இறைவன் திருநணு வேத்து பாடல்
வல்வித் தகத்தான் மொழிவார்பழியிலரிம் மண்ணின்மேலே.

திருச்சிற்றம்பலம்

**இருப்பிடம்:** ஈரோடு இருப்புப்பாதை நிலையத்தில் இருந்து, வடமேற்கே சுமார் பத்து கல் தொலைவில் உள்ளது. இஃது இப்போது பவானி என்ற பெயரால் வழங்கி வருகின்றது. பதுமமலை, சங்கமலை, திருச்செங்கோடு என்னும் நாகமலை, மங்கலமலை, வேதமலை (ஊராட்சிக்கோட்டை) என்ற ஐந்து மலைகளினிடையே, இஃது அமைந்து இருக்கின்றது.

**தலப் பெயர்கள்:** பவானி யாறு காவிரியாற்றுடன் கூடுகின்ற தலமாதலின், இதனைப் 'பவானி கூடல்' எனவும் வழங்குவர். இதனைத் தரிசித்தோர்க்கு யாதொரு தீங்கும் நண்ணாத தலம் ஆதலின், நண்ணுவூர் அல்லது நணு என இதற்குப் பெயர் அமைந்ததாகத் தலபுராணம் கூறும். குபேரன் வழிபட்டதனால் தட்சிண அளகை என்றும்; இலந்தை தல விருட்சமாகச் சிறந்து விளங்குவதனால் தட்சிண வதரிகாச்சிரமம் என்றும்; பராசர முனிவர் பூசித்ததனால் பராசர க்ஷேத்திரம் என்றும்; வடநாட்டிற் கங்கை யமுனை சரசுவதி என்னும் மூன்று பேராறுகள் கூடுவது போலக் காவிரி பவானி அமுதநதி என்ற மூன்று ஆறுகளும் இங்குக் கூடுதலால், திரிவேணி சங்கமம் தட்சிணப்பிரயாகை திருமுக்கூடல் கூடற்சங்கமம் என்றும், பற்பல காரணப்

பெயர்கள் வழங்கும். இத் தலத்துக் கல்வெட்டுக்களில் திரு வாணிகூடல் என்று இது குறிப்பிடப் பெற்றுள்ளது.

**தல வரலாறு :** மகாவிஷ்ணுவால் கொடுக்கப்பட்ட அமிர்தத்தைப் பராசரர் குடத்திலிட்டு வைத்துத் தாபித்த அமிர்தலிங்கேசர் மூலத்தானத்திற்கு நிருதி திக்கில் எழுந்தருளியுள்ளார். விசுவாமித்திரர் இங்கு இறைவனைப் பூசித்து வசிட்டராற் பிரமரிஷி எனப் புகழப்பெற்றார். மகப்பேறு இல்லாது வருந்திய தந்துவருத்தனச் சோழமன்னனின் மனைவி இங்குப் பூசித்து, இலந்தை மரத்தினின்று வீழ்ந்த கனியை யுண்டு மகப்பேறு பெற்றாள். மருத்தாசுரன், இலிங்கிவிருடாகவி என்னும் இருவர், விசுவதாமன் சங்கோசன் முதலியோர் பூசித்துப் பல பாதகங்களினின்று நீங்கினர். வேதவியாசர் பூசித்து வேதங்களை வகுக்க வல்லவர் ஆயினர். பிரமதேவர் வணங்கிப் படைப்புத் தொழில் செய்யும் வன்மை அடைந்தனர். William Garrow என்ற வெள்ளைக்காரத் துரைமகனார், இங்குள்ள அம்பிகையின் அருளால் தாம் ஓர் ஆபத்தினின்று உயிர்தப்பிய நிகழ்ச்சியின் நினைவாக, அம்பிகையின் பள்ளியறையில் வைக்க ஒரு தந்தக் கட்டிலை வழங்கி யுள்ளார் (1804).

**தீர்த்தங்கள் :** காவிரி, பவாநி, அமுதநதி என்பன இத்தலத்தின் முக்கியமான தீர்த்தங்கள். அமுதநதி அந்தர்வாகினியாக (தரைக்குள் மறைவாக) ஓடுகின்றது. காயத்திரி லிங்கக் கோயிலுக்கு எதிரில் காயத்திரி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், சரசுவதி தீர்த்தங்கள் உள்ளன. இவையன்றித் தேவ தீர்த்தம், சக்கர தீர்த்தம், சூரிய தீர்த்தம், உரோமச தீர்த்தம் என்னும் வேறு பல தீர்த்தங்களும் இங்குண்டு. ஆடி தை புரட்டாசி அமாவாசை நாட்களிலும், ஆடிப் பதினெட்டாம் பெருக்கிலும், மாதப் பிறப்பு ஆண்டுப் பிறப்பு சங்கராந்தி புண்ணிய நாட்களிலும், கிரகண காலங்களிலும் மக்கள் ஏராளமாக வந்து, காயத்திரி மடுவில் நீராடி இறைவனை வழிபட்டுச் செல்கின்றனர்.

**கோயில் அமைப்பு :** ஊரில் இருந்து கோயிலுக்குள் வடக்குவாயில் வழியாகத்தான் செல்லவேண்டும். ஐந்து

நிலைகளுள்ள கோபுரம் வாயிலை அழகு செய்கின்றது. கோபுரத்திற்கு வெளியே விநாயகர் கோயிலும், ஆஞ்சநேயர் கோயிலும் வடக்கு நோக்கி யிருக்கின்றன. இவைகளுக்கும் கோபுரத்திற்கும் இடையில் நந்தி மண்டபம் உள்ளது. கோபுரத்திற்கு உள்ளே நுழைந்ததும் இருமருங்கும் விநாயகரும் முத்துக்குமாரசாமியும் காட்சி யளிக்கின்றனர். பிறகு காணப்படுவது ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி. இதற்கு வலப்புறம் சவுந்தர வல்லித் தாயார், சந்தான கோபால கிருஷ்ணன் சந்நிதிகளும், இடப்புறம் வேணுகோபாலரின் தெற்கு நோக்கிய சந்நிதியும் அமைந்திருக்கின்றன. வேணு கோபாலரின் திருவுருவம் அற்புதச் சிற்ப வேலைப்பாடுடையது. இது மைசூர் மன்னரால் செய்து வைக்கப்பட்டதாம். ஆதிகேசவர் சந்நிதியின் முன்மண்டபத்தின்மேல் இராமாயண கதை முழுவதும் கற்சிற்பங்களால் ஆக்கப் பெற்றிருக்கின்றது. தாயார் சந்நிதியில் ஒரு தூணில் கோதண்டராமர் திருவுருவம் கம்பீரமாகக் காட்சி யளிக்கின்றது. மற்றொரு தூணில் சீதாராமர் அமர்ந்த கோலம். அவர்தம் திருவடிகளின் அருகில் அனுமான் வலக் கையில் வீணையும், இடக் கையில் தாளக் கட்டைகளும்கொண்டு பஜனை செய்யும் காட்சி கவினுறத் திகழ்கின்றது. பாவு கல்லில் புலிக்காலும் யானை முகமும் படைத்த ஓர் உருவம் கையில் வீணையுடன் விளங்குகின்றது. அதனை 'வீணை ஏந்தும் விநாயகர்' என்கின்றனர்.

பெருமாள் கோயிலுக்குச் சற்றுத் தெற்கே இலட்சுமி நரசிம்மர் சந்நிதியுள்ளது. திருவுருவம் அழகிய வேலைப்பாடு மிக்கது. அதற்கும் தெற்கே விசாலாட்சி, விசுவநாதரின் கிழக்குப் பார்த்த தனிச் சந்நிதிகள் உள்ளன. இதற்கு அப்பால் வேதநாயகி அம்பிகை சந்நிதி யிருக்கின்றது: பண்ணார் மொழியம்மையின் அருள்கனிந்த திருமுகம் பார்க்குந் தொறும் பரவசம் அடையச் செய்கின்றது. முன்னுள்ள நிருத்த மண்டபத்தின் பத்துச் சித்திரத் தூண்களில் சிவனடியார்கள், திருப்பணிச் செல்வர்கள் இவர்களின் சிலைகள் செதுக்கியிருக்கக் காணலாம். அம்பிகை கோயி

லுக்குத் தெற்கே ஆறுமுகர் சந்நிதி அமைந்திருக்கின்றது. அதற்கும் தென்புறம் சுரஹரேசர் கோயில் உள்ளது. மூன்று கால்கள், மூன்று கைகள், மூன்று தலைகளுடன் அவர் காட்சி தருகின்றார். இவரை வணங்கினால் தீராத சுரநோய்களெல்லாம் தீர்ந்துவிடுகின்றன. இம்மூர்த்திக்குச் செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் மிளகுரசம், அறைக்கீரைச் சுண்டல் ஆகியவை படைக்கப்படுகின்றன.

கோயிலுக்குள் தென் கடைசியில்தான் சங்கமேசுவரர் திருச்சந்நிதி இருக்கின்றது. கோயிலுக்கு வெளியில் தென்புறம் காவிரிக்கரையில் கிழக்கு நோக்கிக் காயத்திரி லிங்கக் கோயிலும், சகஸ்ர லிங்கக் கோயிலும் உள்ளன. இவைகளுக்கு மேல்புறம் அமுதலிங்கேசர் கோயில் உள்ளது. அமுதலிங்கம் சுயம்புமூர்த்தி, தனியே ஆவுடையார்மேல் வைக்கப்பட்டிருக்கின்றது. யாராவது பிரசவ வேதனைப்பட்டால் அந்த வீட்டுக்காரர்கள் வந்து இலிங்கத்தைத் திருப்பி வைத்துப் போனால் பிரசவ வேதனை குறைந்துவிடுமாம். மகப்பேறு இல்லாதவர்கள் இந்த இலிங்கத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு ஆவுடையாரைச் சுற்றிவந்தால், மகப்பேறு உண்டாகும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது. ஆதலின் இந்தச் சந்நிதி இரவு பகல் எந்நேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டுக்கள் :** மற்ற கோயில்களிற் காணப்படுவது போல, இக்கோயிலிற் கல்வெட்டுக்கள் மிகுதியாக இல்லை. இம்முடிக்கட்டி முதலியார், கட்டி முதலியார் என்ற சிற்றரசர்களும், தேவராயன் என்ற தளவாயும் பல மண்டபத் திருப்பணிகள் செய்ததாகச் சில கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இறைவன் சந்நிதித் தூண் ஒன்றில், திருப்பணி செய்த இம்முடிக்கட்டி முதலியார், அவர் மனைவியார் திருவுருவங்கள் உள்ளன. அம்பிகையின் சந்நிதித் தூண் ஒன்றில், கட்டி முதலியார் துறவி யொருவரிடம் திருப்பணிக்காகப் பொற்கிழி கொடுக்கும் நிலையில் சிலைகள் காணப்படுகின்றன. அங்கே ஒரு தூணில் உள்ள அழகிய பெண் உருவத்தின் தலையில் தண்ணீரைக் கொட்டினால், அது சிரிப்பது போன்ற

காட்சியளிக்கின்றது. அதைச் 'சிரிக்கும் சிலை' என வழங்குகின்றனர். கோயில் திருப்பணி இப்போது சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சுவாமி பெயர் : சங்கமேசுவரர். இரண்டு ஆறுகளின் நடுவில் இருப்பதால், நட்டாற்றீசர் எனவும் வழங்குவதுண்டு. கல்வெட்டுக்களில் திருநணாவுடையார் என்று காணப்படுகின்றது. அம்பிகையின் பெயர் : வேதநாயகி, வேதவல்லி, பொன்னார் மௌலி என்பன. கல்வெட்டுக்களில் பண்ணார் மொழி அம்மையார் என்று அழகாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

உ

# 4. திருக்கொடிமாடச் செங்குன்றூர்

**சம்பந்தர்**

பண் - வியாழக்குறிஞ்சி - முதல் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பின் நல்ல
பந்தண வும்விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்நின்ற
அந்தணனைத்தொழுவார் அவலம் அறுப்பாரே. க

அலைமலி தண்புனலோ டரவஞ் சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான் மலையார் இளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
தலைமக னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. உ

பாலன நீறுபுனை திகழ்மார்பிற் பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கோல மலர்ப்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மல்கும்
நீலநன் மாமிடற்றன் கழலேத்தல் நீதியே. ௩

வாருறு கொங்கைநல்ல மடவாள் திகழ்மார்பில் நண்ணும்
காருறு கொன்றையொடுங் கதநாகம் பூண்டருளிச்
சீருறும் அந்தணர்வாழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான் கழலேத்தல் நீதியே. ௪

பொன்றிகழ் ஆமையொடு புரிநூல் திகழ்மார்பில் நல்ல
பன்றியின் கொம்பணிந்து பணைத் தோளியோர் பாகமாகக்
குன்றன மாளிகைசூழ் கொடிமாடச் செங்குன்றூர்வானில்
மின்றிகழ் செஞ்சடையான் கழலேத்தல் மெய்ப்பொருளே.

ஓங்கிய மூவிலைநற் சூல மொருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியஞ் சடைக்கணிந்து
கோங்கண வும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்வாய்ந்த
பாங்கன தாள்தொழுவார் வினையாய பற்றறுமே. ௬

நீடலர் கொன்றையொடு நிமிர்புன் சடைதாழ வெள்ளை
வாட லுடைதலையிற் பலிகொள்ளும் வாழ்க்கையனைக்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
சேடன தாள்தொழுவார் வினையாய தேயுமே. ௭

மத்தநன் மாமலரும் மதியும்வளர் கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடைமேல் துதைய வுடன்சூடிக்
கொத்தலர் தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்மேய
தத்துவ னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. ௮

செம்பொனின் மேனியனும் பிரமன் திருமாலுந்தேட நின்ற
அம்பவ ளத்திரள்போல் ஒளியாய ஆதிபிரான்
கொம்பண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய
நம்பன தாள்தொழுவார் வினையாய நாசமே. ௯

போதியர் பிண்டியரென் றிவர்கள் புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரைகேட் டுழல்வீர் வரிக்குயில்கள்
கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்நின்ற
வேதிய னைத்தொழநும் வினையான வீடுமே. ௧௦

அலைமலி தண்புனல்சூழ்ந் தழகார் புகலிந் நகர்பேணும்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச் செங்குன்றூர் ஏத்தும்
கலைமலி பாடல்வல்லார் வினையான நாசமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

# திருநீலகண்டத் திருப்பதிகம்

## சம்பந்தர்

### பொது : பண் - வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம். க

காவினை இட்டுங் குளம்பல தொட்டும் கனிமனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றெரித் தீர்என் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம். உ

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத தீண்டப் பெறாதிரு நீலகண்டம். ங

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணியர் என்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீர்உம் கழல்அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம். ச

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் தோள்உடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதும் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்தும் திருவடியே யடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம். ரு

மறக்கும் மனத்தினை மாற்றிஎம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம். சு

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை ஏத்தும் நாம்அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம். எ

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றம் உடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது வணங்குதும் நாம்அடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம். அ

சாக்கியப் பட்டும் சமணுரு வாகி உடைஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீர்அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம். கூ

பிறந்த பிறவியிற் பேணிஎம் செல்வன் கழல்அடைவான்
இறந்த பிறவியுண் டாகில் இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞான சம்பந்தன செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே. க0

திருச்சிற்றம்பலம்

**இருப்பிடம் :** இது திருச்செங்கோடு என இப்போது வழங்கப்பெறும். இத்தலம் சங்ககிரிதுர்க்கம் என்ற இருப்புப் பாதை நிலையத்தில் இருந்து தென்கிழக்கில் 6 மைல் அளவில் கற்சாலையில் அடையத்தக்கது. மோட்டார் பஸ் முதலிய வசதிகள் உண்டு. மலையடிவாரத்தில் இது பெரு நகரமாக விளங்குகின்றது. மலை மிக்க உயரம் உள்ளது. ஏறித் தரிசித்துவருதல் சிறிது கடினம்.

**தலவரலாறு :** திருச்செங்குன்றூர் நாகமாமலை இடபமலை துர்க்கைமலை முதலிய பல பெயர்கள் இதற்கு வழங்கும். ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் உண்டாகிய இகலில் மகா மேருமலையின் ஆயிரம் சிகரங்களில் ஒன்று, அதனை மூடியிருந்த ஆதிசேடனுடைய ஒரு தலையுடன் பறிக்கப்பட்டு வீழ்ந்து மூன்று துண்டமாக, அதில் ஒன்று இம்மலையாயிற்று. அதனாற் பின்னர் இது நாகமலை எனப் பெயர்பெற்றது

என்று புராணம் கூறும். மலையின் வடிவமும் ஒரு நாகம் போன்று இருத்தல் காணலாம். இத்தலத்தில் அம்மையார் தவஞ்செய்து இறைவனது திருமேனியில் ஒரு பகுதி தம் முடையதாகப் பெற்றனர். இதனையே அர்த்தநாரீசர் அல்லது மாதிருக்கும் பாதியன் என்று சைவ நூல்கள் எல்லாம் விதந்துபேசும். இத்திருவுருவம் மூலத்தானத்தில் விளங்குகின்றது. இஃது இத்தலத்துக்கே சிறப்பாக உரிய தாகும். இது திருப்பரங்குன்றுபோலச் சிவபெருமானது சிறந்த தலமாகவும், செங்கோட்டு வேலர் என்று வழங்கும் முருகப்பெருமானுடைய குன்றுதோறாடல்களில் ஒன்றாக வும் உள்ளது. அர்த்தநாரீசர் சந்நிதி மேற்கு நோக்கியும், செங்கோட்டு வேலர் சந்நிதி கிழக்கு நோக்கியும் உள்ளன. இத்தலத்தில் அம்மையார் கந்தர் விஷ்ணு பிரமன் துர்க்கை ஆதிசேடன் ஆகியோர் பூசித்துப் பேறுபெற்றனர். இத் தலம் விறல்மிண்ட நாயனார் அவதாரத் தலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் இத்தலத்தைத் தமது பெருந்திரளான பரிசனங்களுடன் வந்து தரிசித்து "வெந்த வெண்ணீறு அணிந்து" என்ற திருப்பதிகம் பாடியருளினர். இங்கே தமது பரிசனங்களில் ஒரு பகுதியை இருக்கவைத்து, சில பரிசனங்களுடன் மேல் கொங்கில் உள்ள பவானி பேரூர் முதலிய சிவத்தலங்களைத் தரிசித்து மீண்டனர். இத்தலத் திருப்பதிகத்தில் மாதிருக்கும் பாதியனாகிய திருக்கோலத்தை யும், இறைவனின் நின்ற திருக்கோலத்தையும், சுவாமிகள் பலவாறு பாராட்டிப் பாடியிருத்தல் காணலாம். திருஞான சம்பந்தர் இங்கு நின்றும் புறப்பட்டுக் கொங்கிற் குடபுலத் துத் தலங்களைத் தரிசித்துத் திரும்பியபோது, இவ்வூரில் நளிர்சுரம் பரவி வருத்தம்செய்தது. அது தீர்தற்பொருட்டு "அவ்வினைக்கு இவ்வினையாம்" என்று தொடங்கும் திரு நீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடித் "தீவினை தீண்டப் பெறா" என்று ஆணையிட்டருளினார். அதனால் அந்நாடு

முழுமையும் அப்பிணி தீர்ந்து மக்கள் யாவரும் இன்புற்ற னர். இன்றைக்கும் அத் திருப்பதிகத்தை நியமமாகப் பாரா யணஞ் செய்தால், சுரம் முதலிய நோய்கள் நீங்கப்பெறுதல் கண்கூடு. விஷ்ணு சந்நிதியும் இக்கோயிலில் உண்டு. விஷ்ணு வுக்கு ஆதிகேசவப்பெருமாள் என்று பெயர்.

**கல் வெட்டுக்கள் :** பரகேசவரிவர்மனை முதலாம் இராஜராஜன், மதுரைகொண்ட முதற் பரகேசரிவர்மன், சுந்தரபாண்டிய தேவன், சொக்கப்ப நாயக்கன், சொக்க லிங்க நாயக்கன், மைசூர் கிருஷ்ணராஜ உடையார் முதலிய அரசர்களின் கல்வெட்டுக்கள் இங்குக் காணப்படுகின்றன. அவற்றால் அறியப்படுவன பெரும்பாலானவை அந்தணர் களுக்கு அன்னதானமும், யாத்திரைசெய்வோர்க்கு உணவும், விளக்கிற்கு நெய்யும் அளிக்கப்பட்ட நிபந்தங்களேயாகும். 192 முதல் 194 வரையிலுள்ள கல்வெட்டுக்கள் சுப்பிர மணியப் பிள்ளையார் கோயிலைப்பற்றி அறிவிக்கின்றன. கி. பி. 1660 முதல் 1682 வரை அரசாண்ட விசுவநாத சொக்கலிங்கர் காசிவிசுவேசர் கோயிலையும் கோபுரத்தையும் இங்குக் கட்டினார்.

சுவாமியின் பெயர் : அர்த்தநாரீஸ்வரர், மாதியலும் பாதியன். அம்மை பெயர் : பாகம்பிரியாள், அர்த்தநாரீஸ் வரி. அர்த்தநாரீஸ்வரரின் பாதத்தில் ஒரு சிறு ஊற்று அமைந்துள்ளது.

# 5. திருவெஞ்சமாக் கூடல்

## சுந்தரர்

### பண் - கொல்லிக் கௌவாணம்

*திருச்சிற்றம்பலம்*

*எறிக்குங் கதிர்வேய் உதிர்முத்தமொ டேலம்*
*இலவங்கம் தக்கோலம இஞ்சி*
*செறிக்கும் புனலுட் பெய்து கொண்டு மண்டித்*
*திளைத்தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்*
*முறிக்குந் தழைமா முடப்புன்னை ஞாழல்*
*குருக்கத்திகள் மேற்குயில் கூவலறா*
*வெறிக்குங் கலைமா வெஞ்சமாக் கூடல்*
*விகிர்தா அடியேனையும் வேண்டுதியே.* க

*குளங்கள் பலவும் குழியும் நிறையக்*
*குடமா மணிசந் தனமும் அகிலும்*
*துளங்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித்*
*திளைத்தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்*
*வளங்கொள் மதில் மாளிகை கோபுரமும்*
*மணிமண்டபமும் இவை மஞ்சு தன்னுள்*
*விளங்கு மதிதோய் வெஞ்சமாக்கூடல்*
*விகிர்தா அடியேனையும் வேண்டுதியே.* உ

*வரைமான் அனையார் மயிற்சாயல் நல்லார்*
*வடிவேற்கண் நல்லார் பலர்வந் திறைஞ்சத்*
*திரையார் புனலுட் பெய்துகொண்டு மண்டித்*
*திளைத்தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்*
*நிரையார் கமுகும் நெடுந்தாள்தெங்கும் குறுந்தாட்*
*பலவும் விரவிக் குளிரும்*
*விரையார் பொழில்சூழ் வெஞ்சமாக் கூடல்*
*விகிர்தா அடியேனையும் வேண்டுதியே.* ந

பண்ணேர் மொழியாளை யோர்பங் குடையாய் படுகாட்
டகத்தென்றும் ஓர்பற் றொழியாய்
தண்ணார் அகிலும் நலசாமரையும் அலைத்தெற்று
சிற்றாறதன் கீழ்க்கரைமேல்
மண்ணார் முழவும் குழலும் இயம்ப
மடவார் நடமாடும் மணியரங்கில்
விண்ணார் மதிதோய் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. ௪

துளைவெண் குழையும் சுருள்வெண் தோடும்
தூங்குங் காதில் துளங்கும் படியாய்
களையே கமழும் மலர்க்கொன்றையினாய்
கலந்தார்க்கு அருள் செய்திடும் கற்பகமே
பிளைவெண் பிறையாய் பிறங்குஞ் சடையாய்
பிறவாதவனே பெறுதற் கரியாய்
வெளைமால் விடையாய் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. ௫

தொழுவார்க் கெளியாய் துயர்தீர நின்றாய்
சுரும்பார்மலர்க் கொன்றை துன்றும் சடையாய்
உழுவார்க் கரிய விடையேறி ஒன்னார்புரம்
தீஎழ ஓடுவித்தாய் அழகார்
முழவார் ஒலி பாடலோடு ஆடல் அறா
முதுகாடு அரங்கா நடம் ஆடவல்லாய்
விழவார் மறுகில் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. ௬

கடமா களியானை யுரித்தவனே கரிகாடு
இடமா அனல் வீசிநின்று
நடமாட வல்லாய் நரையேறு உகந்தாய்
நல்லாய் நறுங்கொன்றை நயந்தவனே
படம் ஆயிரமாம் பருத்துத்திப் பைங்கட் பகுவாய்
எயிற்றோடு அழலேயுமிழும்
விடவார் அரவா வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே ௭

காடும் மலையும் நாடும் இடறிக்
கதிர்மா மணிசந்தனமும் அகிலும்
சேடன் உறையும் இடந்தான் விரும்பித்
திளைத்தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்
பாடல் முழவும் குழலும் இயம்பப் பணைத்தோளியர்
பாடலொடு ஆடல் அறா
வேடர் விரும்பும் வெஞ்ச மாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. ௮

கொங்கார் மலர்க்கொன்றை யந்தாரவனே
கொடுகொட்டி ஓர்வீணை யுடையவனே
பொங்கா டரவும் புனலுஞ் சடைமேற்
பொதியும் புனிதா புனஞ் சூழ்ந்தழகார்
துங்கார் புனலுட் பெய்துகொண்டு மண்டித்
திளைத்தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்
வெங்கார் வயல்சூழ் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. ௯

வஞ்சி நுண்ணிடையார் மயிற்சாயல் அன்னார்
வடிவேற்கண் நல்லார் பலர்வந் திறைஞ்சும்
வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனையும்
வேண்டுதியே என்றுதான் விரும்பி
வஞ்சியாது அளிக்கும் வயல்நாவலர் கோன்
வனப்பகையப்பன் வன்தொண்டன் சொன்ன
செஞ்சொற் றமிழ்மாலைகள் பத்தும் வல்லார்
சிவலோகத் திருப்பது திண்ணம் அன்றே. ௧௦

திருச்சிற்றம்பலம்

**இருப்பிடம் :** இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கருவூர்ப் பகுதியில் இருக்கின்றது. கருவூரில் இருந்து தென்மேற்கில் அரவக் குறிச்சிச் சாலையில் 8 கல் தொலைவு சென்று, கிளைச் சாலையில் பிரிந்து ஐந்துகல் நடந்தோ, வண்டிகளில் சென்றோ, ஆற்றைக் கடந்து இத்தலத்தை அடையலாம். தங்குவதற்குத் தேவஸ்தானக் கட்டிடம் ஒன்றிருக்கிறது.

**தலவரலாறு :** வெஞ்சன் என்னும் வேட அரசன் இங்கிருந்து அரசாண்டு, இறைவனை வழிப்பட்டுப் பேறுபெற்றான். அவனுடைய தலை நகரமாக இது விளங்கியிருந்தது. கோயிலுக்குப் பின்புறம் தெற்கிலிருந்து ஓடிவரும் குடவனாறு (குழகன் ஆறு), நாலுகல் தொலைவில் அமராவதி நதியுடன் கலக்கின்றது. கோயிலுக்குத் தெற்கே கொஞ்சதூரத்தில் சிற்றாறு என்னும் காட்டாறு இதனுடன் கலக்கின்றது. இவ்விரண்டு ஆறுகள் கூடும் இடத்தில் இருப்பதால் 'கூடல்' என்னும் பெயருடைய இத்தலம், வெஞ்சன் என்னும் அரசனின் பெயருடன் சேர்த்து வெஞ்சமாக் கூடல் எனப்படுவதாயிற்று. அஃது இப்போது வெஞ்சமாங் கூடலூர் என மருவி வழங்குகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்பதிகம் ஒன்றும், அருணகிரி நாதர் திருப்புகழ் ஒன்றும், திருச்செங்கோடு வித்துவான் தி. அ. முத்துச்சாமிக் கோனார் இயற்றிய தலபுராணமும் பிறவும் இதற்குண்டு. கோயில் மதிலுக்கு வெளியில் வட மேற்கில் ஆற்றோரம் வெஞ்சன் என்னும் மன்னனின் சிலை, மார்புவரை மண்ணில் புதைந்திருக்கின்றது. ஆண்டுக்கு ஒருமுறை மக்கள் இங்கு வழிபாடு செய்கின்றனர். கோயிலுக்கு வடக்கே சற்றுத் தொலைவில் பொன்பரப்பி அம்மன் கோயில் இருக்கின்றது. சிவபெருமான் இங்குச் சுந்தரருக்காக ஒரு திருவிளையாடலை நிகழ்த்தினார். தாம் ஒரு கிழவேடம்பூண்டு, சிவகுமாரர்களை இரு சிறுவர்களாக்கி, உமையம்மையை ஒரு முதியவள் ஆகுமாறு செய்து, இரு குமாரர்களையும் கிழவியிடம் ஈடுவைத்துப் பொன்வாங்கிச் சுந்தரர் பாடலுக்குப் பரிசு வழங்கினார். இச் செய்தியை,

“ கிழவேதிய வடிவாகி விருத்தையைக் கிட்டிஎன்றன்
அழகாகும் மக்கள் அடகுகொண்டு அம்பொன் அருளுதிஎன்று
எழுகாத லால்தமிழ் பாடிய சுந்தரற்கு ஈந்தஒரு
மழுவேந்தியவிகிர் தேசுரன் வாழ்கொங்கு மண்டலமே ”

எனக் ‘ கொங்கு மண்டல சதகம் ’ குறிப்பிட்டுப் புகழ்ந்து கூறுகின்றது.

**கோயில் அமைப்பு:** திருக்கோயில் பள்ளத்தில் கிழக்குநோக்கி யிருக்கின்றது. எதிரில் உள்ள ஊர் மேட்டில் இருக்கின்றது. அங்கிருந்து சில படிக்கட்டுக்கள் இறங்கினால்தான் கோயிலை அடையலாம். கோபுரம் இல்லை. மிகப் பழைய கோயில். இரண்டு பிராகாரங்கள் உள்ளன. இவ்வூர் ஒரு கோட்டையாக இருந்து அழிந்துபோனதற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. இத்தலம் சிற்றாற்றின் கீழ்க்கரைமேல் அமைந்திருத்தலைச் சுந்தரர் "சிற்றாறதன் கீழ்க்கரைமேல்" எனத் தம் பதிகப் பாடல்களிற் குறிப்பிடுகின்றார். ஆற்றின் வளத்தையும், ஊரின் செழிப்பையும், மகளிர் திரள்திரளாக வந்து வழிபடுதலையும், இங்கு நடைபெற்ற பல விழாக்களின் சிறப்பையும், சுந்தரரின் தேவாரம் பெரிதும் புகழ்ந்து போற்றியுள்ளது. இத்தகைய ஒரு பேரூர் இப்போது மிகவும் சிற்றூராகிவிட்டமை பெரிதும் இரங்கத் தக்கதாகும். கோயிலும் மிகப் பழுதுபட்டுச் சிதைந்து இருக்கின்றது.

**கல்வெட்டுக்கள்:** இக்கோயிலிற் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவை சுவாமி, அம்பாள் கருவறைச் சுவர்களிலும், முன் மண்டபச் சுவர்கள் தூண்களிலும், திருமாளிகைப் பத்தியின் தென் வட சுவர்களிலும் காணப்படுகின்றன. அவைகளில் 'இராஜகேசரி' 'ஜயகேசரி' என்ற சொற்கள் தனியே பொறிக்கப் பெற்றுள்ளன. இவை கோனேரின்மை கொண்டான், ஜடாவர்மன் சுந்தரபாண்டிய தேவன், பாண்டியன் மாறவர்மன், குலசேகர தேவன், வீரராஜேந்திரன், வீர பாண்டியன் என்னும் மன்னர்கள் காலத்தில் ஏற்பட்டவை. பல ஊர்களை இக்கோயிலுக்கு இறையிலித் தேவதானமாக விட்டதும், கோயிலிற் பூசை முதலியன நிகழ்தற்காகப் பல மானியங்கள் அளித்ததும், விளக்கெரிக்கப் பொன் வழங்கியதும், சுந்தரபாண்டிய தேவன் பண்ணோர் மொழியம்மை கோயிலில் சில திருப்பணிகள் செய்ததும் ஆகிய செய்திகள் பல, இக் கல்வெட்டுக்களாற் புலனாகின்றன.

**இறைவன் பெயர்:** விகிர்தேசுவரர். "வெஞ்சமாக் கூடல் விகிர்தா" எனச் சுந்தரர் ஒவ்வொரு பாடலிலும்

குறிப்பிடுதல் காணலாம். இறைவி பெயர் : விகிர்தேசுவரி, மதுரசுபாஷிணி. தேவாரத்திலும், இக்கோயிற் கல்வெட்டுக்களிலும் பண்ணேர்மொழியம்மை என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

விழா : இக்கோயிலில் இரண்டுகால பூசை நடைபெறுகின்றது. மாசி மாதம் பத்து நாட்கள் விழா நன்கினிது நடத்தப்படுகின்றது.

உ

# 6. திருப்பாண்டிக் கொடுமுடி

சம்பந்தர்

பண் - காந்தாரம் - இரண்டாந்திருமுறை

திருச்சிற்றம்பலம்

பெண்ணமர் மேனியி னாரும் பிறைபுல்கு செஞ்சடை யாரும்
கண்ணமர் நெற்றியி னாரும் காதம ருங்குழை யாரும்
எண்ணம ருங்குணத் தாரும் இமையவ ரேத்தநின் றாரும்
பண்ணமர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. க

தனைக்கணி மாமலர் கொண்டு தாள்தொழு வாரவர் தங்கள்
வினைப்பகை யாயின தீர்க்கும் விண்ணவர் விஞ்சையர்நெஞ்சில்
நினைத்தெழு வார்துயர் தீர்ப்பார் நிறைவளை மங்கை நடுங்கப்
பனைக்கைப் பகட்டுரி போர்த்தார் பாண்டிக் கொடுமுடி யாரே

சடையமர் கொன்றையி னாரும் சாந்தவெண் ணீறணிந் தாரும்
புடையமர் பூதத்தி னாரும் பொறிகிளர் பாம்பசைத் தாரும்
விடையம ருங்கொடி யாரும் வெண்மழு மூவிலைச் சூலப்
படையமர் கொள்கையி னாரும் பாண்டிக் கொடு முடியாரே.

கறைவளர் கொன்றையி னாரும் ஞாலமெல் லாந்தொழு தேத்தக்
கறைவளர் மாமிடற் றாரும் காடரங் காக்கன லேந்தி

மறைவளர் பாடலி னோடு மண்முழ வம்குழல் மொந்தை
பறைவளர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௪

போகமும் இன்பமு மாகிப் போற்றியென் பாரவர் தங்கள்
ஆகமும் உறைவிட மாக அமர்ந்தவர் கொன்றை யினோடும்
நாகமும் திங்களும் சூடி நன்னுதல் மங்கைதன் மேனிப்
பாகம் உகந்தவர் தாமும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௫

கடிபடு கூவிளம் மத்தம் கமழ்சடை மேலுடை யாரும்
பொடிபட முப்புரம் செற்ற பொருசிலை யொன் றுடையாரும்
வடிவுடை மங்கைதன் னோடு மணம்படு கொள்கையி னாரும்
படிபடு கோலத்தி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௬

ஊனமர் வெண்தலை யேந்தி உண்பலிக் கென் றுழல் வாரும்
தேனம ரும்மொழி மாது சேர்திரு மேனியி னாரும்
கானமர் மஞ்ஞைக ளாலும் காவிரிக் கோலக் கரைமேல்
பானல நீறணி வாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௭

புரந்தரன் தன்னொடு வானோர் போற்றியென்றேத்தநின்றாரும்
பெருந்திறல் வாளரக் கன்னைப் பேரிடர் செய்துகந் தாரும்
கருந்திரை மாமிடற் றாரும் காரகில் பன்மணி யுந்திப்
பரந்திழி காவிரிப் பாங்கர்ப் பாண்டிக் கொடுமுடி யாரே.

திருமகள் காதலி னானும் திகழ்தரு மாமலர் மேலைப்
பெருமக னும்மவர் காணாப் பேரழ லாகிய பெம்மான்
மருமலி மென்மலர்ச் சந்து வந்திழி காவிரி மாடே
பருமணி நீர்த்துறை யாரும் பாண்டிக் கொடுமுடி யாரே.

புத்தரும் புந்தியிலாத சமணரும் பொய்ம்மொழி யல்லால்
மெய்த்தவம் பேசிட மாட்டார் வேடம் பலபல வற்றால்
சித்தரும் தேவரும் கூடிச் செழுமலர் நல்லன கொண்டு
பத்தர்கள் தாம்பணிந் தேத்தும் பாண்டிக் கொடுமுடி யாரே.

கலமல்கு தண்கடல் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
பலமல்கு வெண்தலை யேந்திப் பாண்டிக்கொடுமுடி தன்னைச்
சொலமல்கு பாடல்கள் பத்தும் சொல்லவல் லார்துயர் தீர்ந்து
நலமல்கு சிந்தைய ராகி நன்னெறி எய்துவர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசர்

## திருக்குறுந்தொகை

### திருச்சிற்றம்பலம்

சிட்ட னைச்சிவ னைச்செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நீழலமர்
பட்ட னைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்ட னைத்தொழ நம்வினை நாசமே. ௧

பிரமன் மாலறி யாத பெருமையன்
தரும மாகிய தத்துவன் எம்பிரான்
பரம னார்உறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே. ௨

ஊசலா ளல்லள் ஒண்கழலா ளல்லள்
தேச மாந்திருப் பாண்டிக் கொடுமுடி
ஈச னேயெனும் இத்தனை யல்லது
பேசு மாறறி யாள்ஒரு பேதையே. ௩

தூண்டி யசுடர் போலொக்கும் சோதியான்
காண்ட லும்எளி யன்அடி யார்கட்குப்
பாண்டிக் கொடிமுடி மேய பரமனைக்
காண்டும் என்பவர்க்கு ஏதும் கருத்தொணான். ௪

நெருக்கி,யம்முடி நின்றிசை வானவர்
இருக்கொ டும்பணிந் தேத்த இருந்தவன்
திருக்கொ டும்முடி என்றலும் தீவினைக்
கருக்கெ டும்இது கைகண்ட யோகமே. ௫—௧௰

திருச்சிற்றம்பலம்

## சுந்தரர்

### பண் - பழம் பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப்
பாதமே மனம்பா வித்தேன்
பெற்ற லும்பிறந் தேன் இனிப்
பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்தும்
சீர்க்கறை யூரிற்பாண் டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்மறக்கினும்
சொல்லும் நாநமச் சிவாயவே. க

இட்டன் நும்மடி ஏத்துவார்
இகழ்ந்திட்ட நாள் மறந்திட்ட நாள்
கெட்ட நாளிவை என்றலாற்
கருதேன் கிளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்டடி
தொழுதேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்மறக்கினும்
சொல்லும்நாநமச் சிவாயவே. உ

ஓவுநாள் உணர்வு அழியும்நாள்
உயிர்போகும்நாள் உயர்பாடைமேற்
காவுநாள் இவைஎன் றலாற்கருதேன்
கிளர்புனற் காவிரிப்
பாவுதண் புனல்வந் திழிபரஞ் சோதி
பாண்டிக் கொடுமுடி
நாவலா உனைநான் மறக்கினும்
சொல்லும் நாநமச் சிவாயவே. ௩

எல்லையில் புகழ் எம்பிரான் எந்தை
தம்பிரான் என்பொன் மாமணி
கல்லை உந்தி வளம்பொ ழிந்திழி
காவிரி யதன்வாய்க் கரை
நல்லவர் தொழுதேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவா உன்னைநான் மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. ௪

அஞ்சினார்க்கு அரண் ஆதிஎன்
றடியேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்டனேற்கு
அருள்நல்கினாய்க்கு அழிகின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணி கண்ட நான்மறக் கினும்
சொல்லும் நாநமச் சிவாயவே. ௫

ஏடுவான் இளந்திங்கள் சூடினை
என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்பது அரைக்கசைத்த
அழகனே அந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்திழி பரஞ்சோதி
பாண்டிக் கொடுமுடிச்
சேடனே யுன்னைநான் மறக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே. ௬

விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்தேன்
வினைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்
பெறநின்ற காவிரிக் கோட்டிடைக்

குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே. ௮

செம்பொன் நேர்சடை யாய் திரிபுரம்
தீயெழச் சிலை கோலினாய்
வம்புலாங் குழலாளைப் பாகம் அமர்ந்து
காவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற் குயில் கூவமா மயிலாடு
பாண்டிக் கொடுமுடி
நம்பனே யுனைநான் மறக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே. ௯

சாரணன் தந்தை எம்பிரான் எந்தை
தம்பிரான் என்பொன்மா மணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன் தொழும் கறையூரிற்
பாண்டிக் கொடுமுடிக்
காரணா உனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே. ௧௦

கோணிய பிறை சூடியைக் கறையூரிற்
பாண்டிக் கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப்
பித்தனைப் பிறப்பில்லியைப்
பாணுலா வரிவண்டு அறைகொன்றைத்
தாரனைப் படப்பாம்பரை
நாணனைத் தொண்டன் ஊரன் சொல்லிவை
சொல்லுவார்க்கு இல்லை துன்பமே. ௧௦

திருச்சிற்றம்பலம்

**இருப்பிடம் :** கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஈரோட்டுக்கு 23 கல். கொடுமுடி என்னும் இருப்புப் பாதை நிலயத்தில் இருந்து அரைக்கல் தொலைவில் இருக்கின்றது. கறையூர், கொடுமுடி, திருப்பாண்டிக் கொடுமுடி என்ற பெயர்களை யுடையது. இது காவிரியின் மேற்கரையில் இருக்கின்றது. கொங்குநாட்டுச் சிவதலங்கள் ஏழில், மூவராலும் பாடப் பெற்றது கொடுமுடி ஒன்றே.

**தலவரலாறு :** ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் உண்டாயின ஒரு போட்டியில், மேரு மலையின் ஒரு சிகரம் பறிக்கப்பட்டு வீழ்ந்தபோது, அதனினின்றும் ஐந்து மணிகள் சிதறி வீழ்ந்து ஐந்து தலங்கள் ஆயின. அவற்றுள் சிவப்பு மணி திருவண்ணுமலையும், மரகதம் திருஈங்கோய் மலையும், மாணிக்கம் திருவாட்போக்கி (இரத்தினகிரி)யும், நீலம் திருப்பொதிகை மலையும், வைரமணி திருக்கொடு முடியும் ஆயின என்பது தலபுராணம். கொடுமுடி என்பது பெரிய சிகரம் எனப் பொருள்தரும். மலைச் சிகரமே மகுடேசுவரர் ஆக எழுந்தருளியுள்ளார். அகத்தியர் கமண்டலத்திற் கொணர்ந்த காவிரியை இந்திரன் சீர்காழியில் வைத்த நந்தவனத்துக்கு ஆகும் பொருட்டு, விநாயகக் கடவுள் காக்கையுரு எடுத்துக் கவிழ்த்த இடம் இதுவே. அந்நதி இத்தலத்தின் அருகில் உள்ளதென வழங்குவர். இவ்விடம் வரையில் தெற்கு நோக்கி வரும் காவிரி, இங்கிருந்து கிழக்கு நோக்கித் திரும்பி ஓடுவதும் காணத் தக்கது. இங்கே காவிரியாற்றின் இடையில் 'அகத்தியர் பாறை' என வழங்கும் பாறையில் இந் நிகழ்ச்சியைக் குறிக்கும் திருவுருவங்கள் காணத்தக்கன. 'காவிரி கண்ட விநாயகர்' என்ற பெயருடன் இம் மூர்த்தி கோயில் கொண்டுள்ளார். இத் திருக்கோயிலில் வன்னிமரத்தின்கீழ்ப் பிரமதேவர் ஆலயமும், மகுடேசுரர்க்கு நிருதி திசையில் அரங்கநாதராகிய விஷ்ணுமூர்த்தியாலயமும் உண்டு. இவ்விருவரும் மகுடேசுரரைத் தரிசிக்க வந்து அமர்ந்தனர். இதனை யுணராதார், இது திரிமூர்த்தித் தலம் எனக் கூறி அபசாரப் படுவர். கன்மாடன் என்னும் வேதிய

னுக்கு வயிற்றில் இருந்த கறையைப் போக்கி உய்வித்ததனால் கறையூர் எனவும், அங்க வருத்தகன் என்னும் பாண்டிய அரசகுமாரனின் அங்கக்குறையைத் தீர்த்தகாரணத்தால் பாண்டி எனவும், இத்தலம் பெயர் பெற்றது என்பது தலபுராணம். இங்கு மலையம்மன் கோயில் என்ற கிராம தேவதையின் சந்நிதியும் சிறப்புடையது.

**கோயில் அமைப்பு :** காவிரிக்கரையில் கிழக்குநோக்கியிருக்கின்றது. மூன்று கோபுரங்கள் கிழக்கில் உள்ளன. இவைகள் இறைவன் திருமால் அம்மை சந்நிதிகளுக்கு நேரே இருக்கின்றன. கோயிலின் வடபாகத்திற் சுவாமி சந்நிதியும், தென்பாகத்தில் அம்மை சந்நிதியும் கிழக்கு நோக்கி யிருக்கின்றன. இவற்றிற்கு நடுவில் பின்புறம் பெருமாள் சந்நிதியுள்ளது. வடமேற்கு மூலையில் ஆஞ்சநேயர் கோயிலும், பெருமாள் கோயிலுக்குத் தென்புறம் மகாலட்சுமி சந்நிதியும் காணலாம்.

**தீர்த்தங்கள் :** இத்தலத்துக்குரிய தீர்த்தங்கள் நான்கு. காவிரியாறு கோயிலுக்கு எதிரில் ஓடுகின்றது. தேவதீர்த்தம் வன்னிமரத்திற்குப் பக்கத்திலும், பிரமதீர்த்தம் அம்மன் கோயிலுக்குப் பக்கத்திலும், பரத்துவாச தீர்த்தம் சுவாமி சந்நிதியின் முன்பும் உள்ளது. தலவிருட்சம் : வன்னிமரம்.

**கல்வெட்டுக்கள் :** இங்குச் சுந்தரபாண்டியன், கோனேரின்மை கொண்டான், கொங்கு மன்னனை வீரநாராயண இரவி வர்மன் முதலியவர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றினால், அதிராஜராஜ மண்டலத்துக் காவிரி நாட்டுக் கறையூர்த் திருப்பாண்டிக் கொடுமுடி என்றும் ; இறைவன் பெயர்கள் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர், ஆளுடைய நாயனார் என்றும் ; கோயிலில் பள்ளிகொண்ட பெருமாள் (அரங்கநாதர்) பெரிய திருவடி (கருடன்) இளைய பிள்ளையார் (முருகன்) எழுந்தருளியிருந்தனர் என்றும் ; கோயிற் பூசனை திருவிழா திருப்பணிகள்

முதலியவற்றிற்குத் தேவதானமாக நிலங்கள் பல வழங்கப் பட்டன என்றும் அறியப்படுகின்றது.

இத்தலத்துப் பெருமானின் திருநாமங்கள் கொடுமுடி நாதர், மகுடேசர், மலைக்கொழுந்தர் என்பன. இறைவன் சுயம்புமூர்த்தி. தேவியின் திருப் பெயர்கள் வடிவுடைநாயகி, பண்மொழியம்மை என்பன. திருமால் வீரநாராயணப் பெருமாள். பள்ளிகொண்ட திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.

ஆவணியிலும் பங்குனியிலும் நான்கைந்து நாட்கள் சூரியனின் கதிர்கள் சுவாமி, அம்பாள் ஆகிய இரண்டு திரு வுருவங்களிலும் படுகின்றன. இங்குச் சித்திரைத் தேர், ஆடிப் பதினெட்டாம் பெருக்கு, மார்கழித் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி ஆகிய திருவிழாக்கள் சிறப்புற நடை பெறுகின்றன. அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் இதனைப் பாடியுள்ளனர். "திருக்கொடுமுடி என்றலும் தீவினை கருக்கெடும் இது கைகண்ட யோகமே" என அப்பர் இதனைப் பாடியுள்ளார். சுந்தரர் இங்கு நமச்சி வாயப் பதிகம் பாடியருளிய சிறப்பு குறிக்கத் தக்கது.

——

# 7. திருக்கருவூர் ஆனிலை

## சம்பந்தர்

### பண் - இந்தளம் - இரண்டாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தொண்டெ லாம்மலர் தூவி யேத்தநஞ்
சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னார்கரு வூரு ளானிலை
அண்ட னாரரு ளீயும் அன்பரே. க

நீதி யார்நினைந் தாய நான்மறை
ஓதி யாரொடுங் கூடி லார்குழைக்
காதி னார்கரு வூரு ளானிலை
ஆதி யாரடி யார்தம் அன்பரே. உ

விண்ணு லாமதி சூடி வேதமே
பண்ணு ளார்பர மாய பண்பினர்
கண்ணு ளார்கரு வூரு ளானிலை
அண்ண லாரடி யார்க்கு நல்லரே. ௩

முடியர் மும்மத யானை யீருரி
பொடியர் பூங்கணை வேளைச் செற்றவர்
கடியு ளார்கரு வூரு ளானிலை
அடிகள் யாவையு மாய ஈசரே. ச

பங்க யம்மலர்ப் பாதர் பாதியோர்
மங்கை யர்மணி நீல கண்டர்வான்
கங்கை யர்கரு வூரு ளானிலை
அங்கை யாடர வத்தெம் அண்ணலே. ரு

தேவர் திங்களும் பாம்பும் சென்னியில்
மேவர் மும்மதி லெய்த வில்லியர்
காவ லர்கரு வூரு ளானிலை
மூவ ராகிய மொய்ம்ப ரல்லரே. சு

பண்ணி ஞர்படி யேற்றர் நீற்றர்மெய்ப்
பெண்ணி ஞர்பிறை தாங்கு நெற்றியர்
கண்ணி ஞர்கரு ஆரு ளானிலை
நண்ணி ஞர்நமை யாளு நாதரே. எ

கடுத்த வாளரக் கன்க யிலையை
எடுத்த வன்தலை தோளுந் தாளினல்
அடர்த்த வன்கரு ஆரு ளானிலை
கொடுத்த வன்னருள் கூத்த னல்லனே. அ

உழுது மாநிலத் தேன மாகிமால்
தொழுது மாமல ரோ னுங் காண்கிலார்
கழுதி ஞன்கரு ஆரு ளானிலை
முழுது மாகிய மூர்த்தி பாதமே. கூ

புத்தர் புன்சமண் ஆதர் பொய்யுரைப்
பித்தர் பேசிய பேச்சை விட்டுமெய்ப்
பத்தர் சேர்கரு ஆரு ளானிலை
அத்தர் பாதம் அடைந்து வாழ்மினே. க0

கந்த மார்பொழிற் காழி ஞானசம்
பந்தன் சேர்கரு ஆரு ளானிலை
எந்தையைச் சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தை யில்துய ராய தீர்வரே. கக

திருச்சிற்றம்பலம்

**இருப்பிடம்** : இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு பகுதியின் தலைமையிடம். கரூர் என்னும் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து ஒருகல் தொலைவில் கோயில் இருக்கிறது. ஊருக்குக் கருவூர் என்றும், கோயிலுக்கு ஆனிலை என்றும் பெயர். "தொண்டர்தம் சிந்தைநீங்கா அந்நிலை அரனார் வாழ்வது ஆனிலை என்னும் கோயில்" என்பது சேக்கிழார் வாக்கு.

**தலவரலாறு** : இத்தலத்திற்கு வஞ்சி, ஆதிமாபுரம், ஆதிபுரி, வஞ்சுளாரணியம், வஞ்சிவனம், கற்பபுரி, கரபுரி, கோபிதாரவனம், பசுபதீச்சரம், பாஸ்கரபுரம், சண்மங்கலபுரம் எனப் பல பெயர்கள் வழங்கும். காமதேனுவாகிய

ஆன் (பசு) வழிபட்டதால் ஆனிலை என்றும், கற்பந் தோறும் பிரமன் தவஞ்செய்து படைப்புத் தொழிலாற்றல் பெற்றபடியால் கற்பபுரி என்றும், அவன் கருவுற்பத்தி செய்த இடமாதலால் கருவூர் என்றும், திருமால் இங்கு பள்ளிகொண்டிருத்தலால் பாஸ்கரபுரம் என்றும், வஞ்சி மரங்கள் நிறைந்துள்ளதால் வஞ்சிவனம் என்றும், மலை காடு ஆறு தீர்த்தம் நகரம் கோயில் என்ற ஆறு மங்கலப் பொருள்கள் உள்ளமையால் சண்மங்கலபுரம் என்றும் பெயர்கள் அமைந்தன. இவ்வூர்க் கோயிலில் உள்ள கல் வெட்டுக்களில் முடிவழங்கு சோழபுரம் என்று இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. சோழ மன்னர்களின் தலைநகராகவும், சோழர்கள் முடிசூட்டிக்கொள்ளும் ஐந்து ஊர்களான காவிரிப்பூம்பட்டினம் கரூர் திருவாரூர் உறையூர் சேய்ஞலூர் என்பவற்றுள் ஒன்றாகவும் இந்நகரம் விளங்கியது. சேரநாட்டின் தலைநகரான வஞ்சியென்பது இக்கருவூர்தான் என்பது ஒரு சில ஆராய்ச்சியாளர்களின் கருத்து. திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமானுக்குத் தெய்வயானை அம்மையாரைத் திருமணம் செய்துகொடுத்தபோது, தேவேந்திரன் கருவூரில் அரசாண்ட சோழ மன்னனை முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு அழைப்புக் கொடுத்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது.

இத்தலத்தில் சுக்கிரன், முசுகுந்தன், கோபிதாரன், விபண்டகன் என்பவர்கள் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர். மேலும் எறிபத்தநாயனார், புகழ்ச்சோழநாயனார், சிவகாமி ஆண்டார், கருவூர்த்தேவர் முதலிய சிவனடியார்கள் பசுபதீச்சுரரை வழிபட்டு முத்தியடைந்தனர். சுக்கிரன் இத்தலத்தில் தவஞ்செய்து மிருதசஞ்சீவி மந்திரத்தை உபதேசிக்கப் பெற்றான் என்பர்.

**கோயில் அமைப்பு :** திருஆனிலைக்கோயில் ஊருக்கு மேற்கில் அமைந்துள்ளது. கோயில் வாயிலைப் பெரிய கோபுரம் அழகு செய்கிறது. இறைவன் சந்நிதி கிழக்கு நோக்கியும், இரண்டு அம்மன் சந்நிதிகள் கிழக்கும் தெற்கும் நோக்கியும் விளங்குகின்றன. தெற்கு வெளிப்பிராகாரத்தில் கருவூர்த்தேவர் கோவில் இருக்கிறது. ஒன்பதாம் திருமுறை

யினுள்ள திருவிசைப்பாவில் பத்துப் பதிகங்களை அருளி யவர் இவரே. வடக்கு வெளிப் பிராகாரத்தில் அழகிய நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. இலிங்கமூர்த்தி சிறிது வடபுறம் சாய்ந்திருக்கிறார். முடியில் பசுவின் கொம்பு பட்ட வடு இருக்கின்றது. இக்கோயிலில் இலிங்கமூர்த்தியின் மேல் பங்குனி 27, 28, 29-ஆம் நாட்களில் சூரியனுடைய கதிர்கள் படுகின்றன. ஐப்பசி மாதத்திலும் இங்ஙனம் அதே தேதிகளில் நிகழ்கின்றது. ஆயினும் மக்கள் பங்குனி மாதத்தில்தான் இதனைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

**பஞ்சலிங்கங்கள் :** இத்தலத்தில் பஞ்சலிங்கங்கள் சிறப் பாகச் சொல்லப்படுகின்றன. ஆதிநாயகராகிய பசுபதிலிங்கம், அதன் கீழ்ப்பாலுள்ள கோடீச்சுரலிங்கம், அதற்கும் கீழ்ப்பா லுள்ள கயிலாயநாதலிங்கம், அதன் தெற்கேயமைந்த சரிய மால் ஈசலிங்கம், அதற்கும் அக்னி திக்கில் ஆம்பிரநதி நதிக் கரையில் இருக்கும் வஞ்சுளேச்சுரலிங்கம் என ஐந்துமாம். இத்தலத்தின் விருட்சம் வஞ்சி (அசோகம்).

**தீர்த்தங்கள் :** இத்தலத்தின் தீர்த்தங்களில் சிறந்தன ஆறு. அவைகள் ஆம்பிரநதி, தேனு தீர்த்தம் (வெண்ணை மலையில் உள்ளது), முருகதீர்த்தம் (ஆம்பிரநதிக்குக் கிழக்கே கோபிதாரவனத்தில் இருப்பது), அரசதீர்த்தம் (பதரி வனத் திற்கு மேற்கே ஆம்பிரநதிக்கரையில் உள்ளது), தாடகை தீர்த்தம் (ஆதிநாயகர் ஆலயத்தில் உள்ளது), பிரமதீர்த்தம் (வஞ்சுளேச்சுரத்துக்குக் கிழக்கேயுள்ளது) என்பனவையாம். காமதேனு உண்டாக்கிய வெண்ணை மலை இத்தலத்திற்கு மேற்கே மூன்று கல் தொலைவில் இருக்கிறது. இது முருகப் பெருமானுக்குகந்த சிறந்த குன்றுதோறாடல்களுள் ஒன்று. இதன் பெயருக்கு ஏற்றபடி, இம்மலை வெண்மையாயும், கடு வெயிலிலும்கூடக் குளிர்ந்தும் இருக்கும்.

**கல்வெட்டுக்கள் :** கருவூர் திருஆனிலைக் கோயிலில் 17 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை வீரராஜேந்திர சோழன், மூன்றாம் குலோத்துங்கன், இராஜேந்திரசோழன், விக்கிரம சோழன், இராஜ இராஜதேவன், வீரபாண்டியன்,

சுந்தரபாண்டியன், மீனாட்சி நாயக்கன் முதலிய மன்னர் களின் காலத்தவை. இவைகள் பாக்கூர், கணபதி நல்லூர், வீரசோழ நல்லூர், நெல்வேப்பள்ளி, ஆதிச்சமங் கலம் முதலிய கிராமங்களைக் கோயிலுக்கு வழங்கிய செய் தியைக் கூறுகின்றன. ஒரு கல்வெட்டில் கருவூர், வெங் கல நாட்டின் வீரசோழ மண்டலத்தின் ஒரு பகுதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கி. பி. 1066-இல் வீரராஜேந் திரன் பாக்கூர் என்ற கிராமத்தைக் கோயிலுக்கு வழங்கிய செய்தியைக் கூறும் கல்வெட்டின் கடைசியில் "இத்தர்மம் காப்பான் பாதம் என் தலைமேலே" என்று மிகப் பணிவுட னும் பக்தியுடனும் குறித்திருப்பது நோக்கத்தக்கது.

**நூல்கள் :** இத்தலத்தைப்பற்றிப் பதினொரு பாடல்களை யுடைய பதிகம் ஒன்றைத் திருஞானசம்பந்தர் அருளியுள் ளார். அருணகிரிநாதர் எட்டுத் திருப்புகழ் பாடல்களை இங்கு அருளிச் செய்திருக்கின்றார். கருவூர்த்தல புராணம் என்ற நூல் 21 சருக்கங்களும், 1129 பாடல்களும் கொண்ட தாய்த் திகழ்கின்றது. இதை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

சுவாமி பெயர் : பசுபதீசுரர், கலியாண பசுபதீசுரர் என்பர். அம்பிகையின் பெயர் : கிருபாநாயகி. கிழக்கு நோக்கியுள்ள அம்பிகையை அலங்காரவல்லி யென்றும், தெற்கு நோக்கியுள்ள தேவியைச் சௌந்தரநாயகி என்றும் வழங்குகின்றனர். தல புராணத்தில் வடிவுடையம்மை என்னும் பெயர் காணப்படுகின்றது.

---

# மலைநாட்டுத் தலம்

## திருஅஞ்சைக்களம்

### சுந்தரர்

### பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே
சடைமேற் கங்கை வெள்ளம் தரித்த தென்னே
அலைக்கும் புலித்தோல்கொண்டு அசைத்த தென்னே
அதன்மேற் கதநாகம் கச்சார்த்த தென்னே
மலைக்கு நிகர்ஒப் பனவன் திரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அலைக்கும் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. க

பிடித்தாட்டி யொர்நாகத் தைப்பூண்ட தென்னே
பிறங்கும் சடைமேற் பிறைசூடிற் றென்னே
பொடித்தான் கொண்டு மெய்முற் றும் பூசிற்று என்னே
புகர்ஏறு உகந்து ஏறல் புரிந்த தென்னே
மடித்து ஓட்டந்து வன்திரை எற்றியிட
வளர்சங்கம் அங்காந்து முத்தம் சொரிய
அடித்தார் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. உ

சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக் கனியே
சிறியார் பெரியார் மனத் தேற லுற்றால்
முந்தித் தொழுவார் இறவார் பிறவார்
முனிகள் முனியே அமரர்க்கு அமரா

சந்தித் தடமால் வரைபோல் திரைகள்
தணியாது இடறும் கடலங் கரைமேல்
அந்தித் தலைச்செக்கர் வானே ஒத்தியால்
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. ௩

இழைக்கும் எழுத்துக்கு உயிரே ஒத்தியால்
இலையே ஒத்தியால் உளையே ஒத்தியால்
குழைக்கும் பயிர்க்கோர் புயலே ஒத்தியால்
அடியார் தமக்கோர் குடியே ஒத்தியால்
மழைக்கு நிகர்ஒப் பனவன் திரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அழைக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. ௪

வீடின் பயனென் பிறப்பின் பயனென்
விடையே றுவதென் மதயானை நிற்கக்
கூடும் மலைமங்கை ஒருத்தி யுடன்
சடைமேற் கங்கை யாளைநீ சூடிற் றென்னே
பாடும் புலவர்க்கு அருளும் பொருளென்
நிதியம் பலசெய் தகலச் செலவில்
ஆடுங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. ௫

இரவத் திடுகாட் டெரிஆடிற் றென்னே
இறந்தார் தலையிற் பலிகோடல் என்னே
பரவித் தொழுவார் பெறுபண்டம் என்னே
பரமா பரமேட்டி பணித் தருளாய்
உரவத் தொடுசங்க மோடுஇப்பி முத்தம்
கொணர்ந்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அரவக் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. ௬

ஆக்கும் அழிவும் அமைவும்நீ என்பன்நான்
சொல்லுவார் சொற்பொருள் அவைநீ என்பன்நான்
நாக்கும் செவியும் கண்ணும்நீ என்பன்நான்
நலனே இனிநான் உனைநன் குணர்ந்தேன்

நோக்கும் நிதியம் பல எத்தனையும்
கலத்திற் புகப்பெய்து கொண்டேற நுந்தி
ஆர்க்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. எ

வெறுத்தேன் மனைவாழ்க் கையைவிட் டொழிந்தேன்
விளங்கும் குழைக் காதுடை வேதியனே
இறுத்தாய் இலங்கைக் கிறையா யவனைத்
தலைபத் தொடுதோள் பல இற்று விழக்
கறுத்தாய் கடல்நஞ் சமுதுண்டு கண்டம்
கடுகப் பிரமன் தலைஐந் திலும்ஒன்று
அறுத்தாய் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. அ

பிடிக்குக் களிறே ஒத்தியால் எம்பிரான்
பிரமற்கும் பிரான்மற்றை மாற்கும் பிரான்
நொடிக்கும் அளவிற் புரம்மூன்று எரியச்
சிலைதொட் டவனே உனைநான் மறவேன்
வடிக்கின் றனபோற் சிலவன் திரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அடிக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. கூ

எந்தம் அடிகள் இமையோர் பெருமான்
எனக்கென்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந்தண் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனை
மந்தம் முழவும் குழலும் இயம்பும்
வளர்நா வலர்கோன் நம்பி யூரன்சொன்ன
சந்தம் மிகுதண் தமிழ்மாலைகள் கொண்டு
அடிவீழ வல்லார் தடுமாற் றறுப்பாரே. க0

திருச்சிற்றம்பலம்

**இருப்பிடம் :** இது மலைநாட்டில் உள்ள தேவாரம் பெற்ற தலம். இப்போது 'திருவஞ்சிக்குளம்' என்று வழங்குகின்றது. இருஞாலக்கோடா என்ற இருப்புப் பாதை

நிலையத்தில் இறங்கி, மேற்கே 4 மைல் தூரம் செல்ல வேண்டும். இடையே ஒரு கழியைக் கடக்கவேண்டும். கொடுங்கோளூர் என்னும் ஊருக்கு அருகில் உள்ளது. கொடுங்கோளூர், மகோதை எனவும் பெயர் பெறும். இது சேரமான் பெருமாள் சிவத்தொண்டு செய்து கொண்டிருந்த தலம்.

**தலபுராணம் :** இங்கே அரசாண்டிருந்த சேரமான் பெருமாள் திருவாரூரிற் சுந்தரமூர்த்தி நாயனார் இல்லத்துக்கு வந்து, நாயனாருடைய நட்பைப் பெற்றார். சுந்தரர் பாடிய திருப்பதிகப் பாடல்கள், இத்தலத்தின் பெயரை அஞ்சைக்களம் என்று குறிப்பிடுகின்றன.

சிவபெருமான் அனுப்பியருளிய வெள்ளையானையின் மீது ஏறிக்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளும், அவர் செல்வது அறிந்து குதிரையின்மீது ஏறித் தொடர்ந்து கொண்டு சேரமான் பெருமாள் நாயனாரும், இங்கிருந்து புறப்பட்டுத் தான் திருக்கயிலாயம் சென்று சேர்ந்தனர் எனப் பெரியபுராணம் கூறுகின்றது.

**வரலாறு :** முன்பு கொடுங்கோளூரும் திருவஞ்சைக்களமும் ஒன்றாக இணைந்திருந்தன என்றும், இதுவே சேரமன்னர்களுக்கு உரிய தலைநகரம் என்றும் சில ஆராய்ச்சிக்காரர்கள் எழுதியிருக்கின்றார்கள்.

**பறை வைத்தல் :** திருக்கோயிலில் இருந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் சேரமான் பறம்பு என்ற இடம் இருக்கிறது. அது சேரமான் பெருமாள் வாழ்ந்த அரண்மனை இருந்த இடம். அங்கே ஒரு நினைவுச் சின்னம் எழுப்பிச் 'சேரமான் பறம்பு-சேரமான் பெருமாள் அரண்மனை இருந்த இடம்' என்று கல்லில் வெட்டியிருக்கின்றார்கள். மாசி மாதம் திருக்கோயிலில் விழா நடைபெறும் போது, இவ்விடத்திற் கூடையில் அரிசி பழம் வெற்றிலை பாக்கு தேங்காய் முதலியவற்றைக் கொண்டுபோய் வைத்து, எடுத்து வருகின்றார்கள். இதைப் 'பறை வைப்பது' என்று சொல்கிறார்கள். சேரமான் பெருமாள் விழாக் காலங்களில் அதற்குரிய

பண்டங்களை அரண்மனையில் இருந்து அனுப்பின செய்தியை நினைப்பூட்டும் செயல் இது. சேரமான் பறம்பை அடுத்துக் கழிக்கரையிற் சில இடிபாடுகள் இருக்கின்றன. அப்பகுதி களைக் 'கோட்டை முக்கு' என்று வழங்குகின்றனர்.

**கோயில் அமைப்பு :** இக் கோயில் மலையாளத்தில் உள்ள கோயில்களைப் போலவே இருந்தாலும் சில வேறுபாடுகளும் உடையது. கோயிற் சுவரில் சேரமான் பெருமாள் குதிரை யின் மேல் ஏறிச் செல்வது போன்ற சிற்பம் இருக்கின்றது. புறத்திலே ஒரு பிராகாரமும், உள்ளே ஒரு பிராகாரமும், இரண்டுக்கும் நடுவிலே குறுகலாகச் சுற்றுப் பிராகாரம் ஒன்றும் உள்ளன. இங்கே அம்பிகை இல்லை. இறைவனை 'வஞ்சிக்குளத் தப்பன்' எனக் குறிப்பிடுகின்றனர். இங்கே யுள்ள நடராஜ விக்கிரகத்தின் பீடத்தில் 'திருவஞ்சிக்குளம் சபாபதி' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு இருக்கின் றன. சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரர் ஆகிய இருவருடைய செப்பு விக்கிரகங்களையும் ஓரிடத்தில் பிரதிட்டை செய்து வணங்குகின்றார்கள்.

தந்தை ஜமதக்கினி முனிவரின் கட்டளைப்படி, தமது தாய் வேணுகாதேவியைக் கொலை புரிந்த தீவினை நீங்குமாறு, பாசுராமர் இங்கு இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றனர் எனத் தலபுராணம் கூறுகின்றது.

இத்தலத்துக் குரிய மரம் கொன்றை. அது வெளிப் பிராகாரத்தில் இருக்கிறது. கோயிலுக்குள் பல தீர்த்தங்கள் இருக்கின்றன.

தபால் பெட்டி **504** டெலிபோன் : **32357**

தந்தி : "மேயர்டிரக்"

# மேயர் அண்டு கம்பெனி

(ஸ்தாபிதம் 1930)

**16, ஐயா பிள்ளை தெரு, பார்க்டவுன், மதராஸ்**

**எல்லாவித இந்திய, இங்கிலீஷ் அமெரிக்க**
**மருந்துகளும் சரசமான விலைக்கு**
**மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.**

*

ஜனங்கள், வியாபாரிகள், டாக்டர்கள்,
சர்க்கார் லோக்கல் பண்ட், மிஷனரி ஆஸ்பத்திரிகளின்
நன்மதிப்பைப் பெற்ற இடம்

*

**வர்ணம், வார்னிஷ் வகைகளும்**
**கிடைக்கும்.**

வெளியூர் ஆர்டர்கள் உடனே கவனிக்கப்படும்.

Texmark 4684 Phone: 83355

# K. KUPPUSWAMY MUDALIAR & Co.

FAST COLOUR
YARN DYE HOUSE

12, Thambu Naicken Street, Triplicane,
MADRAS-5

*Sole Proprietor*

K. C. NAGALINGA MUDALIAR